பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 17 சனிக்கிழமை (02-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:247

# வரைவுக்கு திருத்தம் சமர்ப்பிக்க முன் சகலரையும் இணைத்து ஆலோசனை



## புலிகளின் தலைமை முடிவு என்கின்றார் பாலகுமாரன்

யாழ்ப்பாணம்,ஓக.2

**இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசு முன் வைத்திருக்கும் நகலுக்கு திருத்தம் சமர்ப்பிப்பதற்கு முன்பாக இது விடயத்தில் சகலரையும் ஒன்றிணைத்து ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும். எல்லா அறிஞர்களையும், சட்ட வல்லுநர்களையும் ஒன்றிணைத்து ஒரு சட்டரீதியான - அரசியல் ரீதியான - பதிலைத் தயாரியுங்கள் - என்று தலைவர் பிரபாகரன் கூறியிருக்கின்றார்.**

**- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான வே.பாலகுமாரன்.**

"இப்போது எமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. சிங்கள அரசுகள் இத்தனை கால ஏமாற்றுதல்களையும் உலகின் முன்பாக மிகத தெளிவாக அரகேற்றம் செய்வதற்கான அருமையான வாய்ப்புக்கிடைத்திருக்கின்றது. அரசின் இடைக்கால நகல் என்ற இரண்டு பக்க ஆவணத்தை வைத்துக்கொண்டு இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றை புரட்டிக் காட்டப் போகிறோம் - என்றும் அவர் தெரிவித்தார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'உலைக்களம்' என்ற கவிதை தொகுப்பின் வெளியீட்டு விழா நேற்று மாலை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. அந்த விழாவில் கலந்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை!

## திருமலையில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

திருகோணமலை,ஓக.2

திருகோணமலையில் உள்ள விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

நேற்று திருகோணமலை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு விஜயம் செய்த புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அங்கு செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

குரங்குபாஞ்சான் முகாமை தாம் சென்று பார்வையிட வேண்டிய தேவை ஏதும் இல்லை என்றும், எனவே, அங்கு தான் செல்லமாட்டார் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பில் கடந்த ஆறு தினங்களாகத் தங்கியிருந்த சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இலுப்படிச்சேனைப் பாடசாலை மைதானத்தில் இருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் திருகோணமலைக்குப் புறப்பட்டார். அவரை மூத்ததளபதி கேணல் கருணா உட்பட பல தளபதிகளும் வழியனுப்பி வைத்தனர்.

தமிழ்ச்செல்வன் நேற்றுக்காலை

(14 ஆம் பக்கம் பார்க்க)

### சுன்னாகம் மயிலங்காட்டில்

## இளம்தாய், குழந்தை உட்பட ஐந்து பேரைக் காணவில்லை

### தகவல் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.2

இளம் தாய், அவரது ஆறுமாதக் குழந்தை உட்பட ஐவரைக் காணவில்லையென மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

சுன்னாகம் - மயிலங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்களான பிரவன்-சுலோஷனா (வயது 18), அவரது 6மாத பெண் குழந்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் ஒழுங்குபேண விசேட செயலணி இயங்கும்

யாழ்ப்பாணம்,ஓக.2

நாளை ஆரம்பமாக இருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் ஒழுங்குக் கட்டுப்பாடு என்பவற்றைக் கண்காணிப்பதற்கு விசேட செயலணி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் இந்தச் செயலணி செயற்படவுள்ளது.

நல்லூர்ப் பிரதேச கிராம அலுவலர்கள், யாழ். மாநகரசபை அதிகாரிகள் மற்றும் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்தச் செயலணியில் அங்கம்வகிப்பர்.

செயல்ணியின் அலுவலகம் நல்லூர் ஆலயம் முன்பாக தனியார் கட்டடம் ஒன்றில் இன்று முதல் இயங்கும்.

பக்தர்களின் அடிப்படை வசதிகள், வீதி ஒழுங்கு, பாதுகாப்பு, திருட்டு மற்றும் அடியார்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தும் சம்பவங்கள் போன்றவற்றைக் கண்காணித்து உடனுக்குடன் உரிய நடவடிக்கைகளை இந்தச செயலணி மேற்கொள்ளும்.

ஆலயச் சூழலில் அமைதிக்கு பங்கம் விளைவிப்போர் மற்றும் சீரழிவுச் செயல்களில் ஈடுபடுவோர் குறித்து பக்தர்கள் இந்தச் செயலணியின் அலுவலகத்தில் முறையிடமுடியும் என்று அதன் தலைவர் சீ.வி.கே.சிவஞானம். தெரிவித்தார். (ஜ-5-86)

### நல்லூர் மஹோற்சவம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.2

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகின்றது.

நாளை காலை, 10.30 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 25 தினங்கள் மஹோற்சவம் நடைபெறும்.

உற்சவத்துக்கு முந்திய வைரவர் சாந்தி வைபவம் இன்று பிற்பகல் ஆலயத்தில் நடைபெறும்.

மஹோற்சவத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கின்றன.

இம்முறை மஹோற்சவ காலத்தில நாடு முழுவதிலும் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஜ-10)

## வடக்கு-கிழக்கிற்கு உடனடியாக 150 மருத்துவர்கள் நியமிக்கப்படுவர்

### மட்டக்களப்பில் அமைச்சர் தயாரத்ன உறுதி

மட்டக்களப்பு,ஓக.2

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் மருத்துவர்கள் பற்றாக்குறையைத் தீர்த்துவைப்பதற்காக 150 மருத்துவர்கள் உடனடியாக நியமிக்கப்படுவர். எனது சேவை எல்லோருக்கும் சமமானதாகவே மேற்கொள்ளப் படுகிறது.

சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்டுள்ள அதி தீவிர சிகிச்சைப் பிரிவைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், த.தங்கவடிவேல், ஞா.கிருஷ்ணபிள்ளை, கொள்கை திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாஹிர் மௌலானா, அரசாங்க அதிபர் இமோன குருசாமி உட்பட அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்ட வைபவத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கு வைத்திய சாலைகளை துரிதகதியில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் - என்றார்.

ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.பேசுகையில்:-

இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த விடுதலைப் புலிகளும், பிரதமரும் விரைவாக செயற்படுகின்றனர். இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம், சிங்கள மக்களுக்குரிய பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு புலிகள விருப்பம் கொண்டுள்ளனர். இடைக்கால நிர்வாகம் ஏற்பட்டபின் வடக்கு-கிழக்கு மாகாணம் துரிதகதியில் அபிவிருத்தியடையும் - என்றார். (ஐ)

### உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்தவாரம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும் எனப்பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மஹிந்த விஜேசிறி தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவ

(14 ஆம் பக்கம் பார்க்க)

### உத்தேச இடைக்கால நிர்வாக சபை குறித்து

# பிரதமர் விளக்கம் அளித்தால்தான் ஜனாதிபதி ஒத்துழைப்புத் தருவார்!

## பாதுகாப்பு, பொலீஸ், காணி, வரி ஆகியவை பற்றி தெளிவுபடுத்தக் கோருகின்றது பொ.ஐ.முன்னணி

கொழும்பு,ஓக.2

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாகசபை ஒன்றை வழங்குவது தொடர்பான விடயத்தில் அச்சபைக்கு பாதுகாப்பு, பொலீஸ், காணி, வருமானம் (வரி) ஆகியவை சம்பந்தமாக வழங்கப்படும் அதிகாரங்கள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்பட வேண்டும். அவ்வாறு விளக்கமளித்தால் மட்டுமே இடைக்கால நிர்வாகசபை குறித்து பிரதமருடன் ஆராய்வதற்கு ஜனாதிபதி இணங்குவார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம நேற்று எதிர்க் கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான நகலை அமைச்சரவையில் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி வலியுறுத்திய போதும், அதை அமைச்சரவைக்கு கொண்டுசெல்வதற்கு அரசு பின் வாங்குகிறது. இது ஏன்?

விடுதலைப் புலிகளுக்கு அரசு கையளித்த இடைக்கால யோசனை தொடர்பான நகல் அதற்கு அடுத்த நாளே பத்திரிகையில் வெளியாகியது.

ஜனாதிபதிக்கு அரசு கொடுத்த நகலுக்கும் விடுதலைப் புலிகளுக்கு கொடுத்த நகலுக்குமிடையில் பாரிய வித்தியாசங்கள் இருப்பது தெளிவாகியுள்ளது. இருந்த போதிலும், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், 'அதற்கு காரணகர்த்தா ஜோன் வெஸ்பேர்க்' என்றும் அதில் சில மாற்றங்களை அவரே மேற்கொண்டார். அது ஒரு பெரிய விடயமே அல்ல என்றும் கூறியுள்ளார்.

ஓர் இறையாண்மை மிக்க நாட்டின் - மிகவும் முக்கியத்துவமான அரசியல் விடயங்கள் தொடர்பான ஆவணத்தில் - பிறநாட்டவரான ஜோன் வெஸ்பேர்க் மாற்றம் செய்வது எங்ஙனம் நியாயம்?

எனவே, பிரதமர் மேற்கூறப்பட்ட விடயங்கள் குறித்து உடனடியாக ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இதையே நாம் வலியுறுத்துகிறோம் - என்றார் அவர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ‘உலைக்களம்’ வெளியீட்டு நிகழ்விலிருந்து...



விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தேசியக்கொடியை ஏற்றுகின்றார்...



பாலகுமாரன், இளம்பரிதி, புதுவை இரத்தினதுரை...



கலந்துகொண்டவர்களில் சிலர்...








*அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கனிடமிருந்து முதற் பிரதியை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், சிறப்புப் பிரதிகளை மாவீரர் அர்ச்சனாவின் தந்தை சதாசிவம், திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகள் ஆகியோர் பெறுகின்றனர்.*

*படங்கள் : அலுவலகப்படப்பிடிப்பாளர்*



எம்.பி.ந.ரவிராஜ் மற்றும் பிரமுகர்கள்...



‘உலைக்களம’ நூலை ஆவலோடு புரட்டும் அவசரம்...



மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் பொதுச்சுடரை ஏற்றியபோது...















மதிப்பீட்டு உரை வழங்கிய ஐ.சாந்தன், அ.சண்முகதாஸ், மு.திருநாவுக்கரசு, வெளியீட்டுரை வழங்கிய சி.கருணாகரன், பதிலுரைவழங்கும் புதுவை, தலைமையுரையாற்றிய இளம்பரிதி, சிறப்புரையாற்றிய வே.பாலகுமாரன்.

## முன்னணி தலைவர் பதவியை மாறி மாறி வகிக்கத்திட்டம்

### சு.க.-ஜே.வீ.பி.தலைவர்கள் ஆராய்வு

கொழும்பு,ஓக.2

சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நிறுவப்படவிருக்கும் தேசிய முன்னணியின் உயர்பதவிகளைப் பங்குபோடுவது தொடர்பாக இருந்து வரும் இழுபறி நிலையைப் போககுவது குறித்து இருதரப்பு தலைவர்களும் ஆராய்ந்து வருகிறார்கள்.

உத்தேச முன்னணியின் தலைவர் பதவியை காலத்துக்குக் காலம் மாறிமாறி இரு கட்சிகளும் வகிக்கும் ஒரு திட்டம் குறித்து இருதரப்பு தலைவர்களும் விரிவாக ஆராய்ந்திருக்கின்றனர்.

முன்னாள் சபாநாயகரான அனுரா பண்டாரநாயக்க எம்.பி. முன்வைத்த ஒரு யோசனைப்படியே தலைவர் பதவியை மாற்றிக்கொள்ளும் திட்டம் ஆராயப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கிடையே, சு.க.-ஜே.வி.பி.முன்னணி தொடர்பான மற்றொரு முக்கிய பேச்சு அடுத்த வாரத்தில் நடைபெறவிருக்கிறது. (ஐ)

## ஜூலைக் கலவரங்கள் அரசியல்வாதிகளாலும் அரசினாலும் நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்டவை

### உண்மை கண்டறியும் ஆணைக்குழு உறுதிப்படுத்துகிறது

1983ஆம் ஆண்டு ஜூலையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலவரங்கள் அரசியல்வாதிகளினாலும் அரசாங்கத்தினாலும் திட்டமிட்டு நடத்தப்பட்டவையாகும் என்று உண்மை கண்டறியும் ஆணைக்குழு சாட்சியங்களின் மூலம் கண்டறிந்துள்ளது.

முன்னாள் பிரதம நதியரசர் எஸ். சர்வானந்தா தலைமையிலான இந்த ஆணைக்குழு கடந்த பல மாதங்களாக இது தொடர்பான சாட்சியங்களை விசாரணை செய்துவந்தது.

பாதுகாப்பற்ற அப்பாவி மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட கலவரங்கள் தானாகவே ஏற்பட்டவையல்ல என்றும் -

நன்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டவை என்றும் - ஜூலைக் கலவரங்களை ஆணைக்குழு குறிப்பிட்டிருக்கின்றது.

தனது பிரஜைகளைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கும் அரசு, தனது பிரஜைகளுக்கு எதிராகக் குற்றமிழைக்கும் ஒன்றாக மாறியதாகவும் ஆணைக்குழு கூறுகிறது.

1983ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையிலான ஆறு நாள்களில் நடைபெற்ற கலவரங்களில் 358 பேர் உயிரிழந்தனர் என்று அரசு அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது. ஆயினும், மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன, கலவரங்கள் ஆரம்பித்த ஆறு நாள்களின் பின்னரே வன்முறைகளை நிறுத்தும்படி மக்களுக்குக் கோரிக்கை விடுத்தார்.

ஜூலைச் சம்பவங்கள் நாட்டின் சகல மக்களிடையேயும் பீதி, பாதுகாப்பற்ற தன்மை ஆகியவை குறித்து ஆழமான சந்தேகங்களை ஏற்படுத்தியதோடு, தமிழ்ப் போராட்டவாதிகளைப் போஷிக்கவும், வளர்க்கவும் உதவியதைப் போன்று சிவில் யுத்தத்தின் ஆரம்பமாக அமைந்தது எனவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.2

நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியின் பன்னிரெண்டாவது வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

முதன்மை விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் கலந்துகொள்வார். விடுதலைப் புலிகளின் யாழ்.-நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ)

# சதாமின் புதல்விகள் ஜோர்தானில் தஞ்சம்

## மற்றொரு ஒலிநாடாப் பேச்சு நேற்று வெளியீடு

பதவி கவிழ்க்கப்பட்ட ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் புதல்விகள் இருவரையும், அவர்களது பிள்ளைகளையும் ஜோர்தானில் தங்குவதற்கு மனிதாபிமான முறையில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.



ஜோர்தான் தஞ்சமளித்ததையடுத்து சதாமின் இரு புதல்விகளும், அவர்களது ஒன்பது பிள்ளைகளும் நேற்றுமுன்தினம் ஜோர்தானைச் சென்றடைந்தனர்.

இதனை ஜோர்தான் தகவல்துறை அமைச்சர் நபில் அல்ஷரீவ் உறுதிப் படுத்தியுள்ளார்.

அபுதாபியில் இருந்து விமானம் மூலம் ஜோர்தானைச் சென்றடைந்த இவர்களுக்கு அங்கு தங்குமிடவசதி உட்பட அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

சதாமின் புதல்விகளான ரபாவினதும், ரணாவினதும கணவர்கள் 1996 இல் சதாமின் உத்தரவில் கொலை செய்யப்பட்டிருந்தனர். இதனால், தந்தையுடனான உறவில் இவர்களுக்கு விரிசல் இருந்தபோதிலும் பின்னர் சமரசம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இவர்கள் அரேபியப் பெண்கள். எந்த நாட்டிற்குச் சென்று தஞ்சம் அடைவது என்று தெரியாமல் தத்தளித்தவர்கள். எனவேதான், ஜோர்தான் அவர்களுக்கு தஞ்சமளித்துள்ளது என்று ஜோர்தான் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சதாமின் புதல்விகளுக்கு தஞ்சமளிக்குமாறு ஜோர்தான் மன்னர் அப்துல்லா உத்தரவு பிறப்பித்ததையடுத்து இந்த அறிவிப்பு வெளியானது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சதாமின் மனைவி சாஜிதா கொய்ரலா ரெல்பாவினதும் இளையமகள் ஹெலாவினதும் வதிவிடங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை.

இதற்கிடையே -

சதாமின் மற்றோர் ஒலிநாடா நேற்று அல் - ஜெஸீரா தொலைக் காட்சியில் ஒலிபரப்பப்பட்டது. அதில், அமெரிக்கப் படையினரை எதிர்த்து ஈராக்கியர்களை தீரமுடன் போராடுமாறு அவர் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது புதல்வர்களுக்கு ஏற்பட்ட நிலை தனக்கு வரக்கூடாது என்பதற்காக, வெடிகுண்டுகள் அடங்கிய இரண்டு இடுப்புப் பட்டிகளை சதாம் கட்டியிருக்கிறார் என்று அல்-ஹயத் என்ற அரபுப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், சதாமை அமெரிக்கப் படைகள் நெருங்கி வருகின்றன என்றும், விரைவில் அவர் அகப்படுவார் அல்லது கொல்லப்படுவார் என்றும் மேற்குலக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

(ஒ)

### சதாமின் புதல்வர்களை

# காட்டிக் கொடுத்தவர்களுக்கு சன்மானம் வழங்க அங்கீகாரம்

சதாமின் புதல்வர்களைக் காட்டிக் கொடுத்தவருக்கு சன்மானம் வழங்குவதாக அறிவிக்கப்பட்ட 30 மில்லியன் டொலர்களை, உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி புஷ் நிர்வாகம் அங்கீகாரம் அளித்துள்ளது.

30 மில்லியன் டொலர்களும் பணமாகவே வழங்கப்படவுள்ளன என்றும் -

உதேய், குசேய் ஆகியோரைக் காட்டிக்கொடுத்தவரின் சேவைக்கான கொடுப்பனவே இது என்றும் -

அமெரிக்க இராஜாங்கத் திணைகளப் பேச்சாளர் றிச்சார்ட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனால், சதாமின் புதல்வர்களைக் காட்டிக் கொடுத்தவரின் பாதுகாப்புக் கருதி அவரது பெயர் வெளியிடப்படவில்லை. ஆயினும் உதேய்க்கும், குசேய்க்கும் மறைவிடம் கொடுத்த வீட்டு உரிமையாளரே அந்த சந்தேக நபர் என்று மொசுல்வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இவர் அமெரிக்கப் படையின் பாதுகாப்பில் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். (ஒ)

# கெலியின் மரண விசாரணை பரபரப்புடன் நேற்று ஆரம்பம்

லண்டன்,ஓக.2

சர்ச்சைக்குரிய பிரிட்டிஷ் விஞ்ஞானி டேவிட் கெலியின் மரணம் சம்பவித்த சூழல் பற்றிய முதல்கட்ட விசாரணை அனைவரது எதிர்பார்ப்புக்கு மத்தியிலே நேற்று ஆரம்பமாகியது.

வட அயர்லாந்தில் பிரதம நீதியரசராக இருந்த ஹட்டன் பிரபு இந்த விசாரணைகளை பகிரங்கமாக நடத்தினார். இவர் உணர்வுகளைக் கிளறிவிடக்கூடிய அரசியல் விவகாரங்களில் மிகவும் பரீட்சையப்பட்டவர்.



*லைபீரியாவில் உள்நாட்டு யுத்தம் காரணமாக உணவுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட லைபீரியக் குழந்தையொன்று சிகிச்சை முகாமில் எடைபார்க்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.*

இந்த விசாரணைகளின் முதல் கட்டம் இரண்டு மணித்தியாலங்களிற்கும் மேலாக நடந்தன. அடுத்த கட்ட விசாரணைகள் எதிர்வரும் புதன் கிழமை நடைபெறும்:

மர்மமான முறையில் உயிரிழந்த கெலியின் மரணச்சடங்கு எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறுவதன் காரணமாகவே முதல்கட்ட விசாரணையின் பின் இது குறித்த .விசாரணை எதிர் வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டது.

நேற்று நடைபெற்ற பகிரங்க விசாரணைகளை படம் பிடிக்க தொலைக்காட்சி சேவையினருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த அனுமதி வரையறுக் கப்பட்டிருந்தது.

தொடர்ந்து நடைபெறும் விசாரணைகளின் போது சாட்சி கூறவருமாறு எவரையும் நிர்ப்பந்திக்கப் போவதில்லை என்று ஹட்டன் பிரபு தெரிவித்துள்ளார்.

ஆனால், தொடரவுள்ள விசாரணைகளின் போது, பிரிட்டிஷ் பிரதமர் பிளேயரும், தொலைத் தொடர்பு பணிபாளர் அலஸ்ரோக் காம்பலும் சாட்சியமளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

கெலி இரு வாரங்களுக்கு முன அவரது வீட்டுக்கு அண்மையில் மர்மமான முறையில் இறந்துகிடந்தார். இறப்பதற்கு சில தினங்களுக்கு முன் இவர் பிரிட்டிஷ் நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழுவினால் விசாரிக்கப் பட்டார்.

(ஒ)

### ரெய்லரை பதவி விலகுமாறு நேரில் கோர

# மேற்கு ஆபிரிக்க அமைச்சர்கள் லைபீரியாவுக்கு படையெடுப்பு!

கானா,ஓக.2

உள்நாட்டுப் போரில் சிக்கித் தவிக்கும் லைபீரியாவுக்கு சுமார் ஆயிரத்து 500 பேரைக் கொண்ட முதலாவது அமைதிப்படை செல்லவிருப்பதாக கானாவில் கூடிப்பேசிய ஆபிரிக்கத் தலைவர்கள் அறிவித்திருக் கிறார்கள்.

அடுத்த வாரத்தின் முற்பகுதியில் அங்கு செல்லும் அமைதிப்படையினரின் எண்ணிக்கை தொடர்ந்து வரும் மூன்று வாரங்களுக்குள் 3 ஆயிரத்து 250ஆக உயரவிருக்கிறது.

அத்துடன், ஜனாதிபதி ரெய்லரைப் பதவிவிலகுமாறு தொடர்ந்து கோரிவரும் மேற்கு ஆபிரிக்கத் தலைவர்கள், இதனை ரெய்லரிடம் நேரில் வலியுறுத்துவதற்காக லைபீரியத் தலைநகர் மொன்றோவியாவிற்கு நேற்று விரையவிருந்தனர் என்று செய திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

லைபீரியாவைச் சென்றடைந்த அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐந்து மேற்காபிரிக்க நாடுகளின் இராணுவ நிபுணர்கள் குழுவினருக்கு அங்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

தலைநகரை இராணுவ நிபுணர்கள் குழு வந்தடைந்ததும் வீதிகளில் மக்கள் குழுமினர். தமது கைக்குட்டைகளை அசைத்தும், மகிழ்ச்சி ஆரவாரம் செய்தும், சமாதான சுலோகங்களை ஏந்தியும் இராணுவ நிபுணர்கள் குழுவை அவர்கள் வரவேற்றனர்.

அவலங்களின் முடிவு ஆரம்பித்திருக்கிறது என்று அங்கு கூடியவர்கள் தெரிவித்தனர்.

அமைதிப்படையினரை அனுப்புவதென்று ஏற்கனவே உறுதிகள் வழங் கப்பட்டிருந்தன. ஆயினும், பலதடைவைகள் அவை தடைப்பட்டன. போர் நிறுத்தங்கள் மீறப்பட்ட சம்பவங்களும், நிதி ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினைகளும் குறுக்கிட்டன.

இந்நிலையில், கானாவின் அக்ராவில் நைஜீரிய ஜனாதிபதி ஒலுசேகன் ஒபசன்ஜோவும் மற்றும் மேற்காபிரிக்கத் தலைவர்களும் கூடிப் பேசினர்.

அமைதிப்படையின் முதலாவது அணி திங்களன்று அனுப்பப்பட்டாலும் அதிலிருந்து மூன்று நாள்களின் பின்னர் ஜனாதிபதி ரெய்லர் லைபீரியாவிலிருந்து புறப்படவேண்டும் என்றும் அவர்கள் அறிவித்தனர்.

5ஆயிரம் பேர்கள் கொண்ட முதலாவது படைத் தொகுதி திங்களன்று அனுப்பப்படவுள்ளது. இதில் ஆயிரத்து 500 வரையானவர்கள் நைஜீரியப் படையினர். படைகளின் தளபதியாக கேணல் தியோபிலஸ் ரெவய்யா பதவி வகிக்கவுள்ளார். இவர்களின் முதற்பணி ரெய்லரை நாட்டைவிட்டு வெளியேற்றுவதாக இருக்கும். (ஒ)

# ஓசோன் படலத் துவாரம் அடைபட ஆரம்பிக்கிறது

### விஞ்ஞானிகள் உறுதியான சான்றுகள் முன்வைப்பு

லண்டன்,ஓக.2

பூமியைச் சுற்றியுள்ள ஓசோன் படையில் ஏற்பட்டுள்ள துவாரம் மீண்டும் அடைபட ஆரம்பித்துள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதற்கான உறுதியான ஆதாரங்களையும் அவர்கள் முன்வைத்துள்ளனர்.

எனினும், இந்த துவாரம் முழுமையாக அடைபடுவதற்கு குறைந்தது 50 ஆண்டுகளாவது தேவைப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க விஞ்ஞானிகள் குழுவே ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்பட்டிருப்பதை முதலில் கண்டுபிடித்தது. அதனால் பூமியில் உள்ள உயிரினங்களுக்கு பெருமளவில் பாதிப்புக்கள் ஏற்படலாம் என்பதும் விஞ்ஞானிகளால் வெளிக்கொணரப்பட்டது.



வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளது ஓசோனின் துவாரப் பகுதி

இதனையடுத்து, ஓட்டையை அடைப்பதற்கு தீவர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு பரவலாக ஏற்படுத்தப் பட்டது.

ஓசோன் படலத்தில் துவாரத்தை ஏற்படுத் தக்கூடிய இரசாயனப் பதார்த்தங்களை உலகப் பாவனையில் இருந்து தடைசெய்வதற்கான நடவடிக்கைகள் சர்வதேச ரீதியாக எடுக்கப்பட்டன.

இதுவே தற்போது ஓசோன் படலம் மீண்டும் அடைபட ஆரம்பித்திருப்பதற்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

வானிலிருந்து 3 செய்மதிகள் மூலமும் நிலப்பகுதியில் இருந்து 3 நிலையங்கள் மூலமும் கடந்த 20 வருடங்களாக விஞ்ஞானிகள் ஓசோன் படலத்தைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

அவர்கள், ஓசோன் படலத்தின் துவாரம் மேற்பகுதியில் குறிக்கப்பட்ட இடத்தில் இருந்து சிறிது சிறிதாக மறைந்து வருவதைத் தற்போது கண்டுபிடித்துள்ளார்கள்.

"கடந்த இரு தசாப்தங்களில் சுமார் 8 சதவீதம் துவாரத்தின் மேற்பகுதி அடைக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு தசாப்தத்தில் (10ஆண்டுகள்) 4 சதவீதம் மட்டுமே துவாரம் அடைக்கப்படுகின்றது" - என்கிறார் பேராசிரியர் மைக்கல் நியூசேர்ஜ். இவர் அமெரிக்காவின் அல்பாமா பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்றார்.

உலகளாவிய சுற்றுச்சூழல் கவனிப்புக்கு கிடைத்த வெற்றியாக இந்தக் கண்டுபிடிப்பைக் கூறலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஓசோனின் துவாரம் முழுமையாக மூடப்படுவதற்கு முன்னால் எப்படியும் 50 ஆண்டுகள் கடந்துவிடும் என்று பேராசிரியர் நியூசேர்ஜ் மற்றும் அவரது குழுவினர் நம்புகின்றனர். (ம)

### பலஸ்தீனப் பிரதேசத்தில்

# யூதக் குடியிருப்புக்களை அமைக்க இஸ்ரேல் அனுமதி

காஸாப் பகுதிகளில் இஸ்ரேலியக் குடியிருப்புக்கள் அமைப்பதற்கு இஸ்ரேல் அனுமதி வழங்கியுள்ளது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கை பற்றி

உலக அரங்கில்

பலஸ்தீனத் தலைமை கண்டனம் தெரிவித்துள்ளது.

குடியேற்றங்களைக் கைவிடுதல் மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தின் ஓர் அம்சம். எனவே, இரு தரப்பினரும் அதனைப் பின்பற்ற வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

22 குடியிருப்புக்களை அமைப்பதற்கே இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு பலஸ்தீனர்களிடமிருந்தும் இஸ்ரேலியர்களிடமிருந்தும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

சமாதானத்தை வலியுறுத்தும் இஸ்ரேலியக்குழு 1967இல் இஸ்ரேல் கைப்பற்றிய பகுதிகளில் குடியிருப்புக்களை அமைப்பது மேற்குக்கரை காஸா பகுதிகளிலிருந்து வெளியேறும் நோக்கம் இஸ்ரேலுக்கு இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது எனத் தெரிவித்துள்ளது.

இது சமாதானத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைத்திற்கும் எதிராக விடுக்கப்பட்ட சவால் என்று பலஸ்தீனத் தலைவர்களில் ஒருவரான எரிக்கற் தெரிவித்தார்.

## முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

கொழும்பு,ஓக.2

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை குறித்த அரசின் யோசனைகளுக்கு விடுதலைப்புலிகள் அளிக்கும் பதில் தெரியவந்த பின்னரே தமது திட்டம் சமர்ப்பிக்கப்படும என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக முஸ்லிம்களின் நிலைப்பாட்டை தாங்கள் தயாரித்துள்ளதாகவும் -

விடுதலைப் புலிகள் தமது முடிவை அறிவித்த பின்னர் இந்தத் திட்டத்தைத் தாம் சமர்ப்பிக்க எண்ணியுள்ளதாகவும் - முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மீண்டும் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்கு முடிவுசெய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஒ-5)

## சேமிப்பு வங்கி கிளைகள் திறப்பு

சங்கானை, காரைநகர் ஆகிய இரு இடங்களிலும், இரண்டு தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளைத் திறக்கவுள்ளதாக, தேசிய சேமிப்பு வங்கியின் உயர்அதிகாரி தெரிவித்தார்.

இதன் மூலம் மாணவர்களுக்கான சேமிப்பு வைப்புக் கணக்குகளையும், 60வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின செயற்பாடுகளையும் முன்னெடுக்க உத்தேசித்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ஒ-29)

## முன்பள்ளி மாணவருக்கு சத்துணவு

வட்டுக்கோட்டை,ஓக.2

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு இப்பிரிவு குடும்பநல உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரின் ஆலோசனையின்படி பெற்றோர்களால சுழற்சிமுறையில் போஷாக்குணவு வழங்கப்பட்டு வருகின்றது.

வட்டு. வடக்கு கண்ணன் முன்பள்ளி, வட்டு.மேற்கு காந்திஜி முன்பள்ளி, வட்டு.தென் மேற்கு கஜமுகன் முன்பள்ளி ஆகியவற்றில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கே சுழற்சி முறையில் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது. (ஒ-161)

## கால்நடை அலுவலருக்கு பொலநறுவையில் பயிற்சி

அச்சுவேலி,ஓக.2

யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பத்து கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பொலநறுவையில் 'அதிகுளிர் ஊட்டப்பட்ட கால்நடை சுக்கிலப் பாவனை' தொடர்பான பயிற்சி வழங்கப்படுகின்றது.

கால்நடை இனப்பெருக்க விரிவாக்கத் திட்டத்தின் கீழ். ஐ.நா.அபிவிருத்தித் திட்டப் பிரிவு மற்றும் நொக்கொட் நிறுவனங்களின் அனுசரணையுடன் பொலநறுவை கால்நடை இன விருத்தி நிலையத்தில் இப்பயிற்சி அளிக்கப்படுகின்றது. (ஒ-11)

## வீதியைத் திருத்த வேண்டுகோள்

தெல்லிப்பழை,ஓக.2

உரும்பிராய் சிவன் வீதியை புனரமைத்துத்தருமாறு உரும்பிராய் செலல்பா சனசமூக நிலையம் யாழ். அரச அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

உரும்பிராய் சிவன் வீதி, பலாலி வீதியில் ஆரம்பமாகி உரும்பிராய் கிழக்குப் பகுதியூடாகச் சென்று ஊரெழு- நீர்வேலி வீதியில் முடிவடைகின்றது. பெருமளவு மக்களால பயன்படுத்தப்படும் இவ்வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளது. தற்போது இவ்வீதியை முழுமையாக செப்பனிட்டுத் தரும்படி மேற்படி சனசமூக நிலையம் பொதுமக்கள் சார்பாக அரச அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-150)


### விற்பனைக்கு

கண்ணாடியுடன் கூடிய அலுமினிய பிற்றிங் விறாக்கைகள், மேசைகள் முதலியன விற்பனைக்குண்டு.

தொடர்பு:-

ரேகா ஓடியோ வீடியோ சென்ரர்

K.K.S. வீதி,

நாச்சிமார் கோயில் முன்பாக

T.P. 0777-040120

(21-19-117) (20912)


# பிறப்பு, இறப்பு சான்றிதழ் பெற சர்வோதய அமைப்பு உதவுகிறது

யாழ்ப்பாணம், ஓக.2

யாழ்.குடாநாட்டில் காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிவுச்சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுக்கும் பணியில் சர்வோதயம் அமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இறப்பு, பிறப்பு பதிவுகளை மேற்கொள்ளாமல் இருப்பவர்களும் இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வசித்து வந்தவர்களும் காலங் கடந்த பதிவுகளை மேற்கொள்ள விரும்பினால யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்புடன் தொடர்புகளை மேற்கொள்ளலாம என்று சர்வோதய இணைப்பாளர் க.கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பின்தங்கிய இடங்களான வாதரவத்தை, செல்வபுரம், மயிலங்காடு, ஊரெழு ஆகிய இடங்களுக்குச் சென்று அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளும் சர்வோதய அமைப்பினால் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சட்ட நடைமுறைப்படி திருமணப் பதிவு செய்யாதவர்களையும் யாழ். செயலகம் ஊடாக சர்வோதயம் தொடர்புகொண்டு, அவர்கள் திருமண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற உதவிசெய்து வருகின்றது.(ஒ-6-ரி)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.2

ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் ஓவியம் பயின்று பரீட்சையில சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம், இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓவியர் ரமணி கலந்துகொள்கிறார்.(ஒ-9)


### மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தினால்
60 ஆவது ஆண்டு நிறைவை
முன்னிட்டு நடத்தப்படும்
மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

9 வீரர்கள் 12 பந்துப்பரிமாற்றங்களை கொண்டது.

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்குமிடம்:

ஸ்கைலாக் அழகுமாடம்
*(விக்ரோறியாக் கல்லூரி முன்பாக)* சுழிபுரம்.

விண்ணப்ப முடிவு திகதி: 13-08-2003 புதன்கிழமை
விண்ணப்பக் கட்டணம்: 100 ரூபா

விளம்பர அனுசரணை:

குவேனி போட்டோ அன் வீடியோ
மூளாய், சுழிபுரம். 071 347546

(20958)(21-1519)



### கருங்கற்கள் பொழிதல்

இராஜகோபுர வேலைக்கான கருங்கற்களினை வரிவர்க்க அமைப்புடன் பொழிந்து தருவதற்கு அனுபவமும் தகுதியும் வாய்ந்த சிற்பாச்சாரியர்களின் சேவை தேவைப்படுகின்றது.

இதில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகொள்ளும் நேரம்: காலை 9.00 - 11.00

பிரதான நிர்வாக அதிகாரி,
உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரை அகம்
*06, நல்லூர் குறுக்குத்தெரு.*
*யாழ்ப்பாணம்.*

(21-25-19-15) (20959)



### நன்றி நவிலல்

26.07.2003 சனிக்கிழமை அமரத்துவமடைந்த
எமது குடும்பத் தலைவி

திருமதி சோமசுந்தரம் இராசலட்சுமி

அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், எமது துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்குகொண்ட பெரியோர்கள், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அவருக்கு சிகிச்சையளித்த யாழ். போதனா வைத்தியசாலை 3ஆம் வாட் டாக்டர்கள், தாதிமார், ஊழியர்கள் ஆகியோருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

லயன் Dr. சுந்தரராஜன்
இல.2, செட்டித்தெரு,
நல்லூர்.

(20952) (21-19-15-26)



### தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
### விசேட பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் துர்க்காதேவி ஆலய மஹோற்சவகால தொண்டுகள் பற்றிய பொதுக்கூட்டம் நாளை (03-08-2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவிருப்பதால் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி வேண்டுகிறோம்.

- செயலாளர்.

(20966) (21-19)



உ

### அராலி கரைப்பிட்டிக் கணபதீஸ்வரன் திருக்கோயில்
### வருடாந்த திருவிழா

காலம் 03-08-2003 ஞாயிறு முதல் 12-08-2003 செவ்வாய் வரை

| | |
|---|---|
| *கொடியேற்றம்:* | 03-08-2003 ஞாயிறு காலை 9மணி |
| *முத்துச்சப்பறம்:* | 06-08-2003 புதன் இரவு 8மணி |
| *வேட்டைத்திருவிழா:* | 10-08-2003 ஞாயிறு மாலை 3மணி |
| *சப்பறம்:* | 10-08-2003 ஞாயிறு இரவு 8மணி |
| *தேர்:* | 11-08-2003 திங்கள் காலை 9 மணி |
| *தீர்த்தம்:* | 12-08-2003 செவ்வாய் காலை 9 மணி |

நாதாஞ்சலி நாதகலாமணி R.சிவகுமார் குழுவினர்

- தேவஸ்தானம்.

(20965) (21-19)



### வாழிய நின்சேவை

சமூகசேவையாளரும், ஆலயங்களின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவைகள் செய்பவரும், வேணி களஞ்சியம், வேணி ரான்ஸ்போர்ட் உரிமையாளரும்,



வேலணை சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபையின் பொருளாளரும், புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோவிற் திருப்பணிச்சபையின் உபதலைவரும், வேலணை முடிப் பிள்ளையார் ஆலயசபை, பசுப்பாதுகாப்பு ஒன்றியம், தீவக அரிமாக்கழகம், தீவக செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினருமாகிய

திரு.கு.கங்கைவேணியன்

அவர்கள் 30.06.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, அவரது பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

மாணவ நண்பன்
S.சற்குணநாதன்
(ஆசிரியர்)

*சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்,*
*யாழ்ப்பாணம்.*

(20940) (21-25-15-19)



பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக

### 44ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

காலம்: 16, 17 - 08 - 2003 சனி, ஞாயிறு

இடம்: திக்கமுனை மைதானம்

மாவட்ட ரீதியில் நடைபெற இருக்கும் போட்டிகள்

| 16-08-2003 மு.ப.7 மணி | 17-08-2003 மு.ப.7 மணி |
|---|---|
| ❊ வீரதீரச் செயல் போட்டி HIACE VAN கழுத்தால் இழுத்தல் | ❊ 25 மைல் சைக்கிள் ஓட்டம் |
| ❊ M.D. 90 மோட்டார் சைக்கிள் மெதுவான ஓட்டம் | ❊ 10 மைல் மரதன் ஓட்டம் |
| ❊ தலையணைச் சண்டை | ❊ கழகங்களுக்கிடையிலான அஞ்சல் ஓட்டம் |
| ❊ மல்யுத்தம் ❊ பழுதூக்குதல் | ❊ வினோத உடைப் போட்டி |
| | ❊ கயிறு இழுத்தல் |

விண்ணப்ப முடிவு திகதி : 12-08-2003

செயலாளர்
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

விளம்பர அனுசரணை

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்
சர்வதேச தலைமையகம், லண்டன்.

(சி-29246) (21-15-19)





உலகப் புகழ் பெற்ற L.G
சலவை இயந்திரங்கள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(சி-29207)

# உதயன்

## தொ(ல்)லைபேசிச் சேவை; மக்கள் தலையில் சுமை!

மக்களைப் பெரிதும் பாதிக்கும் ஒரு பொது விடயத்தை மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பின்றி எப்படி நடைமுறைக்குக் கொண்டுவரலாம் என்பதை இப்போது நிரூபித்திருக்கின்றது ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம்.

ஆரவாரமான விளம்பரங்கள், தடல்புடலான செய்தியாளர் மாநாடுகள் - அறிவிப்புகள் என்று தனனுடைய பரசாரப பரஙகப பலததனால உணமை நிலையை மூடிமறைத்து, தனது ஏகபோக வியாபார ஆதிக்கம் மூலம் பாவனையாளர்களான பொதுமக்கள் மீது கட்டண அதிகரிப்புச் சுமையை நாசூக்காகச் சுமத்தி விட்டிருக்கின்றது அந்த நிறுவனம்.

முன்னைய காலத்தில்தான் தொலைபேசி ஆடம்பரப் பாவனைப்பொருள் உலகமே 'பூ கோளத் கிராமமாக' (Global Village) சுருங்கிவரும் நவீனப்போக்கில் தொலைபேசி, சாதாரண மக்களும் பயன்படுத்தும் ஓர் அத்தியாவசியப் பொருளாக - சேவையாக - மாறிவிட்டிருக்கின்றது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இந்தச் சேவையைத்தான் வெளிநாட்டு நிறுவனங்களுடனான ஒப்பந்தம் என்ற பெயரில் அவற்றுக்கு விற்றுவிட்டு - நமது மக்களின் மீது அதிக கட்டணச் சுமையை விதிக்கும் அதிகாரம் என்ற குடுமிப் பிடியை அந்த நிறுவனங்களின் கைகளுக்கு விட்டுவிட்டு - அரசு பார்த்துக்கொண்டிருக்கின்றது.

இதுவரை காலமும் சாதாரண வீடுகளுக்கான தொலைபேசி இணைப்புகளுக்கு மாதாந்தக் கட்டணமாக இருநூறு ரூபாவை (வற் வரியுடன் ரூபா 240) அறவிட்டு வந்த ரெலிகொம், இப்போது அதனை சத்தம் சந்தடியின்றி இரண்டரை மடங்காக உயர்த்தியிருக்கின்றது; தொலைபேசிச் சேவையின் முதல் இருநூறு 'யூனிட்'டுக்களுக்கான கட்டணம் இனி இல்லை. அது இலவசம் என்ற பிரசாரத்தை பெரிதாகக் காட்டி, மாத வாடகைக் கட்டண உயர்வை நாசூக்காக அதற்குள் அமுக்கி விட்டுவிட்டது ரெலிகொம் நிறுவனம்.

ஜப்பான் என்.ரி.ரி. நிறுவனத்துடன் 1997 ஓகஸ்ட் 5 ஆம் திகதி இலங்கை அரசு செய்துகொண்ட பங்குடைமை சம்பந்தமான சர்வதேச ஒப்பந்தத்தின் கீழ், இந்தக் கட்டண உயர்வுகளையெல்லாம பொறுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இலங்கை தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு; தம் எண்ணப்படி கட்டணத்தைக் கட்டியடிக்கும் அதிகாரம் ரெலிகொம் நிறுவனத்துக்கு.

இவ்வளவுக்கும் ரெலிகொம் நிறுவனம் மிகுந்த லாபத்தில்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றது. அதன் நன்மை மக்களுக்குக் கிடைப்பதாக இல்லை. மாறாக மேலும் மேலும் சுமைகள் 'கட்டணங்கள்' என்ற பெயரில் மக்கள் தலைமீது சுமத்தப்படுகின்றன.

அதேசமயம், சர்வதேச ஒப்பந்தத்தின் கீழ் கட்டண உயர்வை நம் தலையில் திணிக்கும் ரெலிகொம், இலங்கை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவை, சர்வதேச தரத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் தாழ்வானது என்பதுதான் வேதனைக்குரிய விடயம்.

1997 இற்குப் பிறகு ரெலிகொம் மேற்கொள்ளும் இந்த ஐந்தாவது கட்டண் அதிகரிப்பு அடுத்த மாதம் நடைமுறைக்கு வருகின்றது.

இதுதவிர, யாழ்ப்பாணம் போன்ற - யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட - துரித அபிவிருத்திக்கு உட்பட வேண்டிய - பிரதேசங்களில் தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பித்துவிட்டு நீண்டகாலம் 'தவம்'கிடக்கும் விண்ணப்பதாரிகளிடம், 'மூடிய சுற்று இணைப்பு' என்பதால் முன்னுரிமைக் கட்டணம் என்று தெரிவித்து, பல்லாயிரம் ரூபா 'கட்டணக் கொள்ளை' வேறு.

இப்படி மக்களிடம் பணத்தை மட்டும் 'பிடுங்கும்' கொள்ளைச் சேவை, தொலைத்தொடர்புத் துறையில் மட்டுமல்ல, வேறு பல பொதுத்துறைகளுக்கும் அது இன்று பரவிவருகின்றது.

மக்கள் மயப்படுத்தல், தனியார் மயப்படுத்தல் என்ற பல்வேறு பெயர்களில் முன்னெடுக்கப்படும் தவறான பொருளாதாரக் கொள்கைகள், அவற்றின் அடிப்படையிலான செயற்பாடுகள், நடவடிக்கைகள் போன்றவைதான் இத்தகைய 'கொள்ளைச் சேவை'களுக்கு வெற்றிலை வைத்து அழைத்து வழிகாட்டுகின்றன.

'கொள்ளை'ச் சேவையாக மாறிவரும் தொ(ல்)லைபேசிச் சேவையை நேர் சீராக்க உடன் நடவடிக்கை எடுப்பது அரசின் பொறுப்பு.

## 6 மாதங்களில் 1,300 பெண்கள் அரபு நாடுகளிலிருந்து திரும்பினர்

கொழும்பு,ஓக.2

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்று பலவித இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்ட சுமார் ஆயிரத்து 300 இலங்கைப் பெண்கள் கடந்த 6 மாத கால எல்லைக்குள் இலங்கைக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார சேவைகள் பிரிவு கூறியுள்ளது.

குவைத் நாட்டிலிருந்து 503 பேரும், சவூதி அரேபியாவிலிருந்து 406 பேரும் அழைத்துவரப்பட்டவர்களில் அடங்குவர் என வெளிவிவகார சேவைகள் பிரிவின் தலைவர் சுசந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரபு நாடுகளிலிருந்து பெண்களை இங்கு அழைத்து வருவதற்கான விமானச் செலவாக வெளிவிவகாரப் பிரிவு ஒரு கோடியே ஐம்பத்தைந்து லட்சம் ரூபாவை செலவுசெய்துள்ளதாகவும் -

குறிப்பிட்ட 6மாத கால எல்லைக்குள் மத்திய கிழக்கு நாடுகளில் திடீர் விபத்துகளில் இறந்துபோன 19 பேரின் சடலங்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

## நாட்டு நடப்பு

### பண்பது அழிந்து போச்சு

ஐயகோ! இந்த நாட்டில்
அநியாயம் மிஞ்சிப் போச்சு
கையிலே வாள் எடுத்து
கணவனும் மனையாள் தன்னை
பையவே வெட்டி வீழ்த்தும்
பாதகம் நடக்கு திங்கே
தையலாள் பார்த்திருக்க
தந்தையும் தனையன் தன்னை
கையிலே வாளெடுத்து
கதறிட வெட்டுகின்றான்
வையத்தில் எமது பண்பு
வளர்ந்ததும் பொய்யாய்ப் போச்சு
பையவே எமது பண்பை
பாதுகாத்திடாது விட்டால்
உய்யாது எமது இனம்
உருக்குலைந்து அழிந்து போகும்.

- விகடகவி.

## நல்லூர் உற்சவகாலத்துக்கான சிறப்பு ஏற்பாடுகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.2

நல்லூர் ஆலய உற்சவ காலத்தின்போது மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நேற்று இடம்பெற்ற சிறப்புச் செயலணிக் குழுக் கூட்டத்தில் இந்த ஏற்பாடுகள் குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

நல்லூர் உற்சவ காலத்தில் மேற்கொள்ளவேண்டிய வழமையான நடவடிக்கைகளை யாழ். மாநகரசபை மேற்கொள்ளும். இதற்கு உதவியாக சிறப்புச் செயலணிக்குழு செயற்படும்.

பிரதான வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடைகளில் மாநகரசபை உத்தியோகத்தர்கள் 2பேரும், சிறப்பு செயலணிக் குழு உறுப்பினர் ஒருவரும், தொண்டர் நிறுவன அங்கத்தவர் 2 பேரும் கடமையில் ஈடுபடுவர்.

ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதித் தடைகளில், மாநகரசபை உத்தியோகத்தர் ஒருவரும் சிறப்பு செயலணிக் குழு உறுப்பினர் ஒருவரும், தொண்டர் நிறுவன அங்கத்தவர் 2பேரும் கடமையில் ஈடுபடுவர்.

10ஆம் திருவிழா வரை அதிகாலை 4.00 மணியிலிருந்து இரவு 8 மணிவரையும், 10ஆம் திருவிழாவுக்குப் பின்னர் அதிகாலை 3 மணியிலிருந்து இரவு 10 மணிவரையும் வீதித்தடைகளில் பாதுகாப்புப் பணி இடம்பெறும்.

நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை வீதித் தடைகளுக்கூடாக வியாபாரிகளின் வாகனங்கள் உட்செல்ல அனுமதிக்கப்படும்.

பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் காலை 8.30 மணி வரை தடைகளுக்கூடாக பாடசாலை செல்ல அனுமதிக்கப்படுவர். பாடசாலை முடிந்து வீடு திரும்பும்போது அவர்கள் மாற்று வழியினைப் பயன்படுத்தவேண்டும்.

சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் அதிகாலை 4 மணிக்கு திறக்கப்படவேண்டும்.

தடை முகாம்களுக்குள் வசிப்பவர்களுக்கும், தொழில் நிலையம் வைத்திருப்பவர்களும் வாகனம் கொண்டுசெல்வதற்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்ட வீதித் தடை ஊடாக செல்வதற்கு மட்டுமே அவ்வனுமதி அட்டையினைப் பயன்படுத்தவேண்டும்.

சிறப்பு செயலணிக் குழு தினமும் ஒன்றுகூடி ஆலயச் சூழலில் அன்றாடம் எழும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் முடிவு எடுக்கும்.

சகல பொது நிறுவனங்களும், அரச நிறுவனங்களும், வெளிநாட்டு நிறுவனங்களும்,பாதுகாப்புப் பிரிவினரும் எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும் தடைகளூடாக வாகனங்களைக் கொண்டுசெல்ல முடியாது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென எழுத்துமூலம் அந்த அமைப்புகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்படும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் எக்காரணம் கொண்டும் வாகனங்களைக் கோயில் வீதியில் நிறுத்தக்கூடாது.

கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களும், சிறப்புச் செயலணிக் குழுவுடன் இணைந்து செயற்பாடுவார்கள். கலாசாரத்தினைச் சீரழிக்கும் விதத்தில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு அவற்றை உடனுக்குடன் சிறப்புச் செயலணிக் குழுவிற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி இணைப்பு மூலம் தெரிவிக்கும்படி பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுவோரும் பொது மக்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆலயத் திருவிழா நிறைவடைந்ததும் இரவு 9 மணியிலிருந்து அதிகாலை 4 மணிவரை சிறப்புச் செயலணியின் பாதுகாப்புப் பிரிவினர் கடமையில் ஈடுபட்டிருப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-5-86-ரி)

### வலிகாமம் கல்வி வலயத்தில்

## தனிநபர் கோவை தயாரிப்பில் ஆசிரியர்களுக்கு அலைச்சல்

வலி.வடக்கு,ஓக.2

வலிகாமம் கல்வி வலயத்திற்கு தனிநபர் கோவையைப் பூர்த்திசெய்வதற்கு அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாக நேரிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொண்டர் ஆசிரியர்களாக இருந்து நிரந்தர ஆசிரியர் நியமனம் பெற்ற 49ஆசிரியர்களை அவர்களது தனிநபர் கோவையை ஏற்படுத்துவதற்கு வலிகாமம் கல்வி வலயத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டிருந்தனர்.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழைக் கோட்டங்களைச் சேர்ந்த அந்த ஆசிரியர்கள் குறிப்பிட்ட தினத்தில் பற்பகல் 2.30 மணிக்கு வலய அலுவலகத்துக்கு வருமாறு பணிக்கப்பட்டிருந்தனர்.

தூர இடங்களில் இருந்தும்கூட அந்த ஆசிரியர்கள் குறித்த நேரத்திற்கு வலய அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தனர். ஆயினும் தனிநபர் கோவையைப் பூர்த்தி செய்வதற்கான படிவங்கள் அந்த அலுவலகத்தில் காணப்படவில்லை.

ஒரு படிவத்தைக் கொடுத்து அனைவரும் புகைப்படப் பிரதியெடுத்து வரும்படி பணிக்கப்பட்டதாகவும் -

அதனை புகைப்படப் பிரதி எடுத்துவந்து கொடுத்த பின்னர், வேறொரு படிவத்தை வழங்கி அதனை புகைப்படப் பிரதியெடுத்து வரும்படி மீண்டும் கூறப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதனால், அந்த ஆசிரியர்கள் வீண் அலைச்சலுக்கு ஆளானதாகக் கூறப்படுகிறது.

தனிநபர் கோவை பூர்த்தி செய்ய வேண்டிய அலுவலர் உரிய படிவங்களைப் பெற்று இவர்களை அழைத்து இருந்தால் ஆசிரியர்களின் சிரமங்கள் குறைக்கப்பட்டிருக்கும் என்று ஆசிரியர்கள் தரப்பில் கூறப்பட்டது.

(ஒ-86)

### நாளை

ஆடி 18
ஞாயிற்றுக்கிழமை
(03.08.2003)
திதி : பஞ்சமி
காலை 6.59 வரை
நட்சத்திரம்: அத்தம்
முன்னிரவு 7.16 வரை
ஷஷ்டி பின்னிரவு 4.47
ஷஷ்டி விரதம்
சுபநேரம்: 9.04 - 10.34
ராகுகாலம்: 4.34 - 6.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நல்லொழுக்கதகை வறுமையால் அழிக்கவோ, செல்வத்தால் வழங்கவோ முடியாது.

## மழைநீர் நிரம்பிய குழிக்குள் வீழ்ந்து குழந்தை உயிரிழப்பு!

### உரும்பிராயில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.2

மலசலகூடம் அமைப்பதற்காக வெட்டப்பட்ட குழியில் தவறிவீழ்ந்து ஒன்றரை வயது ஆண் குழந்தை உயிரிழந்தது.

உரும்பிராய் தெற்கு, செல்வபுரம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் தவராசா பிரதாப் என்ற ஆண் குழந்தையே உயிரிழந்தது.

நேற்றுமுன்தினம் இரவு பெய்த மழையினால் குழியினுள் நீர் தேங்கியிருந்ததாகவும் -

பெற்றோர் சாப்பிட்டுக்கொண்டிருந்த வேளை குழியருகே சென்ற குழந்தை அதனுள் தவறிவீழ்ந்துவிட்டதாகவும் -

அயலவர் இது பற்றிக் கூறியதை அடுத்து அவசரமாக குழந்தையை தூக்கி ஆஸ்பத்திரிக்கு எடுத்துவந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட குழந்தையின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஒ-15)

### ஊர்காவற்றுறையில் உள்ள

## பிரதம தபாலகக் கட்டடத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.2

பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை பிரதம தபால் அலுவலகக் கட்டடத்தை மீள நிர்மாணிக்குமாறு தபால் அமைச்சுக்கு ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு சமூக வளர்ச்சிக்கழகம் கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1990ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இக்கட்டடம் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. அக்கட்டடத்தில் பல வருடங்களாக இயங்கிவந்த பிரதம தபால் நிலையம் கடந்த 12வருடகாலமாக இயங்காமல் இருக்கின்றது. தற்போது தபால் நிலையம் இருந்த பகுதி, புதர் மண்டிய காடாகக் காணப்படுகிறது.

அக்கட்டடத்தைப் புனரமைத்து மீண்டும் தபாலகத்தை இயங்கவைக்க எவரும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. தற்போது அத்தபால் நிலையம் ஊர்காவற்றுறை - வேலணை வீதியிலுள்ள தனியார் வீடொன்றில் பல சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகின்றது.

எனவே, தபால் நிலையக் கட்டடத்தை நவீன வசதியுடன் புனரமைத்து அங்கு தபால் நிலையத்தை மீண்டும் இயங்கவைக்க விரைவில் ஆவன செய்க.

- இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-6)

# சமாதான நீதிவான்கள் சங்கம்
## யாழ்ப்பாண மாவட்டம்

1. சமாதான நீதிவான்களுக்கான நீதி அமைச்சின் பதிவு இலக்கம் இல்லாதவர்களுக்கும்
2. சமாதான நீதிவான்களுக்கான நீதி அமைச்சினால் வழங்கப்படும் அடையாள அட்டை கிடைக்கப்பெறாதவர்களுக்கும்

அவற்றைப் பெற்றுக்கொடுக்க சங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வுள்ளதால் சங்கத்தினால் பிரதேச ரீதியாக நியமிக்கப்பட்டுள்ள பின்வருவோரிடம் தத்தமது விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

சங்க வளர்ச்சிக்காகவும் உங்கள் நலன்பேணவும் அங்கத்துவம் பெறாதவர்கள் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பிரதேச வாரியாக தொடர்புகளுக்கு

எஸ். சுப்பிரமணியம் - ச.நீ. - *அத்தியடி, பருத்தித்துறை*
சி. கணபதிப்பிள்ளை - ச.நீ. - *குலனை, கரவெட்டி*
பொ. தங்கராசா - ச.நீ. - *செம்பியன்பற்று தெற்கு, தாளையடி*
இ.மயில்வாகனம் - ச.நீ. - *பாரதி ஒழுங்கை, செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.*
தி.உதயசூரியன் - ச.நீ. - *தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.*
த.இரத்தினசிங்கம் - ச.நீ. - *மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாய்.*
ர.சி. விஜயராசசிங்கம் - ச.நீ.- *நீதிமன்ற வீதி, மல்லாகம்*
அ.ஜீவாமிர்தம் - ச.நீ. - *57, செட்டித்தெரு, யாழ்ப்பாணம்*
சு.திசநாயகம்பிள்ளை - ச.நீ. - *வேலணை கிழக்கு, வேலணை*
அ.ந.அம்பலம் - ச.நீ. - *யமுனா, நெடுந்தீவு தெற்கு*
எஸ்.சரவணமுத்து - ச.நீ. - *கச்சாய் வீதி, கொடிகாமம்.*
க.சுந்தரலிங்கம் - ச.நீ. - *42/3, கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.*

க.நாகராசா ச.நீ.
8ஆம் கட்டை, மல்லாகம்,
தலைவர்

டாக்டர் எஸ்.எஸ்.
அருளானந்தம ச.நீ.
வதனா டிஸ்பென்ஸரி,
சாவகச்சேரி

எஸ். தேவதாசன் ச.நீ.
பொற்பதி வீதி, கொக்குவில்,
இணைச்செயலாளர்.

(C/29240) (21-26-15-19)

# நூல் வெளியீடு

வானியல் வல்லுநர், மாவைப் பண்டிதர் க.சச்சிதானந்தன் எழுதிய 'மஞ்சுகாசினியம் - தமிழ் யாப்பியலின் அடிப்படை' (Fundamentals of Tamil Prosody) என்ற தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட நூலின் வெளியீட்டு விழா இன்று பி.ப.3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கவிஞர் முருகையன் தலைமையில இடம்பெறும் இந்நிகழ்வில் நூலின் ஆய்வுரையை கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார். தமிழ் ஓசைகளை இராமநாதன கல்லூரியின் சங்கீதரத்தினம் ஞானகுமார் சிவநேசன் பாடிக் காட்டவுள்ளார். ஐந்நூறு ரூபா விலையுடைய இந்நூல் மண்டபத்தில் நானூறு ரூபாவிற்கு வழங்கப்படவுள்ளது. (ம-9)

We Serve

சுன்னாகம் லயன்ஸ்
கழகத்தினால் நடத்தப்படும்

# மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

காலம்: நாளை (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.00 மணி (புதிய நேரம்)
இடம்: கந்தரோடை சவாரித்திடல்

*ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

லயன் கே.திருநாவுக்கரசு
தலைவர்,
சுன்னாகம் லயன்ஸ் கழகம்.

விளம்பர அன்பளிப்பு:

**அசோகா நகை அகம்**
இல.111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P. - 222-6290

(20935) (26-21-15-19)

மிருசுவில், படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்
துர்க்காபுரம்



## ஸ்ரீ ஞான துர்க்கை அம்பாள் ஆலய
# அலங்கார உற்சவம்

அலங்கார உற்சவம் நிகழும் சுபானு வருடம் ஆடி 18 ஆம் திகதி (03-08-2003) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஆடிமாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இறுதி நாள் தீர்த்தோற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெறும்.

**9ஆம் நாள் (11-08-2003) விசேடமாக ஆலயத்தில்**

**வாக்களிக்கும் தாயானவள்** ஞான்துர்க்கா தேவியின் தெய்வீக அருட்கலையுடன் சூரியவாள்களின் மேல் ஏறி நின்று துர்க்காதேவியின் வீதி உலாவுடன் சேர்ந்து வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும்.

தினந்தோறும் காலை 8மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூஜை, திருவிழா என்பனவும் அதனைத்தொடர்ந்து அம்பாள் வீதி உலாவும் நடைபெறும். அடியார்கள் அனைவரும் உற்சவத்தில் பங்குகொண்டு எல்லாம்வல்ல ஞானதுர்க்கா தேவியின் பாதார விந்தங்களைத் தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

துர்க்காபுரம் ப.ம.திட்டம்,
மிருசுவில், பரிபாலனசபை.

(20808)(21-15-19)

சி.நவரத்தினம்
ஆலய தர்மகர்த்தா

# 60ஆவது பிறந்தநாள் நினைவு
## மறைந்த நடிகர்



மலர்வு
02 - 08 - 1943

மறைவு
06 - 01 - 2000

## டேவிட் கிறேகறி தங்கராஜா

அறுபதாவது ஜனன தினத்தில் அன்பு அண்ணாவை நினைவு கூருகின்றோம்.

அண்ணாவின் பாசம் நிறைந்த
அன்புச் சகோதரங்கள்:
டேவிற் அல்வின், டேவிற் அலெக்சாந்தர்,
டேவிற் தேவதாஸ், டேவிற் ராஜ்குமார் (குமார்),
டேவிற் செல்லக்குமார், தர்மரட்ணம் பூவனா,
கீதபொன்கலன் ராஜேஸ் மற்றும் உறவினர்கள்.

60/4, சொலமேன் வீதி,
யாழ்ப்பாணம்.

(20851) (21-19-15-32)

UNIVERSITY OF
DUNDEE
(1881 இல் ஸ்தாபிக்கப்பட்டது)

# ஐக்கிய இராச்சியத்தின் மிகவும் பொருத்தமான நகரச் சூழலில் கல்வி பயிலும் வாய்ப்பு

'டன்டி' பல்கலைக்கழகம் ஸ்கொட்லாந்தில் மிகவும் முன்மாதிரியான வகையில் கற்பித்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கல்வி நிறுவனமாகும். கற்பிக்கும் தரத்தில் பிரிட்டனின் முதல் பத்து நிறுவனங்களுக்குள் ஒன்றாக 'ரைம்ஸ் உயர்கல்வி இணையத்தினால' (Times Higher Education Suppliment) இது கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு பட்டதாரிகளுக்கான தொழில்வாய்ப்பிலும் பிரிட்டனில் முதல் பத்திற்குள் இது தரப்படுத்தப்பட்டுள்ளது.

## செப்ரெம்பர் 2003 இற்கான அனுமதிகள் உள்ளன.

*நேர்முகச் சந்திப்பு:* **உதயன் கேட்போர் கூடம்**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

*நேர்முகம் காண்பவர்:* **திரு.அயின் றொபேட்சன்**
சர்வதேச அலுவலக முகாமையாளர்

*நேரம், காலம்:* திங்கட்கிழமை 4ஆம் திகதி
ஓகஸ்ட் மாதம் 2003
முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

*பட்டப்படிப்பு கற்கைநெறிகள்:* வர்த்தகம், கணனி, பொறியியல் (இலத்திரனியல், கட்டடவியல், இயந்திரவியல், கணனி), சித்திரம், வடிவமைப்பும் கட்டடக்கலையும்.

*பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள்:*
சர்வதேச வர்த்தகம், பொறியியல், சட்டம்

மாணவர்கள் தகைமைச் சான்றிதழ்கள் கொண்டு வரவேண்டும். முடியுமானால் நற்சான்றிதழ்களும் கொண்டு வரவும்.

(சித்திரம் மற்றும் வடிவமைப்பு - கட்டடக்கலை என்பவற்றிற்கு கலை வடிவமைப்புப் பிரதிகள் தேவை)

**பெரும்பாலான கற்கை நெறிகளுக்கு பகுதிப் புலமைப் பரிசில்கள் உத்தரவாதமளிக்கப்படுகின்றன.**

ஈடுபாடுள்ள மாணவர்கள் தொலைபேசி மூலம் முன்கூட்டி நேரம் ஒதுக்க விபு விக்கிரமசிங்கவுடன் 01802188 / 0777 - 715987 என்ற இலக்கம் மூலம் தொடர்புகொள்ள வேண்டும்.

international @ dundee.ac.uk
www.dundee.ac.uk.

(C-[illegible]42)(21-15-19)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1944 - 02 - 08

மறைவு
2002 - 08 - 12

அமரர்
## அருணாசலம் அமிர்தலிங்கம் B.A.(Hons)
(சமூக சேவைகள் அலுவலர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

திதி: 02.08.2003 சனிக்கிழமை

அருணாசலத்தின் இரத்தினம் ஈய்ந்த
அமிர்தலிங்கம் எம் ஆருயிர்த் தலைவ!
அருகினில் இருத்தி "ஆனா" எழுதியும்
மரபுகள் செயல்வகை மதியுரை புகட்டியும்
நிமிர வைத்த எம் நித்தியன் தந்தை
"ஆக்கப் பொறுத்தீர், ஆறமுன் அவசரம்?"
தாக்கம் பெரிதே! தாங்குவோம் எங்ஙனம்?
அன்பு அப்பாவே! உங்கள் ஆன்மா
என்றும் சேர்க எம் ஈசனின் திருப்பதம்.

நிரந்தர முகவரி:
*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.*

தற்காலிக முகவரி:
*இலங்கை வங்கி ஒழுங்கை,*
*சுன்னாகம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

(20749) (21-15-19-25)

# ஆசிரிய இடமாற்றங்கள் குறித்து சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல்

வலி.தெற்கு,ஓக.2

அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத தப்படவுள்ள ஆசிரிய இடமாற்றங்கள் தொடர்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றி மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் சகல வலயக் கல்விப் பணிப்பாளர் களுக்கும் சுற்றறிக்கையொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வலயத்துக்குள், வலயங்களுக்கு இடையே, மாவட்டங்களுக்கு இடையே, மாகாணங்களுக்கு இடையே என நடைமுறைப்படுத்தப்படவுள்ள இடமாற் றங்கள் தொடர்பாக சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வலயத்துக்குள் மேற்கொள்ளப்பட வுள்ள இடமாற்றங்களுக்கு ஒக்ரோபர மாதம் 15ஆம் திகதிக்கு முன்னரும்-

வலயங்களுக்கு இடையிலான இட மாற்றங்களுக்கு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னரும்-

ஆசிரியர்கள் தமது விண்ணப்பங களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அனுப்பிவைக்கப்படும் விண்ணப் பங்கள் யாவும் இடமாற்றச்சபையினால் பரிசீலிக்கப்பட்டு சிபாரிசு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பா ளர்களுக்கு நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படும்.

மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்ற விண்ணப்பங்கள் செப்ரெம் பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னும்-

மாகாணங்களுக்கு இடையிலான இடமாற்ற விண்ணப்பங்கள் ஒக்ரோ பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னும்-

ஏற்றுக்கொள்ளப்பட்டு மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பிவைக் கப்படவுள்ளன.

53வயதுக்குமேற்பட்டவர்கள் இட மாற்றம் கோராது விட்டால் அவர்கள் இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள். கர்ப்பிணிகளும் அவர்களின் சம்மதமின்றி இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள்.

கஷ்டப்பிரதேசத்தில் 4ஆண்டுகள சேவையாற்றியவர்களும் வசதியான பிரதேசத்தில் 6ஆண்டுகள் சேவை யாற்றியவர்களும் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஒ-10-152)



ஐ.சாந்தனின் ஆங்கில வசன கவிதை நூல் விமர்சன அரங்கு அண்மை யில் கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தால் நடத்தப்பட்டபோது எழுத்தாளர் ச.இராகவன் விமர்சன உரையாற்றுவதையும், அரங்கிற்குத் தலைமை வகித்த ப.நோ.கூ.ச. தலை வர் த.சிதரம்பரப்பிள்ளை, நூலாசிரியர் மற்றும் சட்டத்தரணி பொன்.பூலோக சிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ)

## கூட்டணியின் கலந்துரையாடல்

வலி.வடக்கு,ஓக.2

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாதாந்தக் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள கூட்டணி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் தலைமையில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் 'இன்றைய அரசியல் சூழ்நிலை' பற்றி ஆரா யப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

# பொலீஸ் முறைகேடுகள் குறித்து ஆணைக்குழுவிடம் முறையிடலாம்

கொழும்பு,ஓக.2

பொலீஸ் நிலையங்களில் எதிர் நோக்கும் இடைஞ்சல்கள், முறைகேடு கள், பக்கசார்பான நடவடிக்கைகள் ஆகியவை குறித்து பொலீஸ் ஆணைக் குழுவிடம் பொதுமக்கள் முறையிட லாம்.

எழுத்து மூலமான இந்த முறைப் பாடுகள் குறித்து ஆராய்ந்து நட வடிக்கை மேற்கொள்ள ஆணைக்குழு வுக்கு பூரண அதிகாரம் உண்டு என்று ஆணைக்குழுவின் தலைவரான ஜனா திபதி சட்டத்தரணி ரஞ்சித் அபே சூரிய தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு, வோட் பிளேஸ், 69/1, ஆம் இலக்கத்தில் உள்ள தேசிய பொலீஸ் ஆணைக்குழுவிடம் முறைப் பாடுகளைத் தெரிவிக்கலாம் எனவும் அவர் கூறுகிறார். (ம)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.2

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை பழைய மாணவர் சங்க பொதுக்கூட் டம் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக் கிழமை பிற்பகல் 3.30மணிக்கு பாட சாலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் ந.வித்தியாதரன் கேட்டுள்ளார். (ஒ-6)

# கிண்ணியா செயலாளருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவுக்கு மனு

## சமுர்த்தி முத்திரை கைமாற்றத்துக்கு ஆட்சேபம்

கிண்ணியா,ஓக.2

கிண்ணியா ப.நோ.கூ. சங்க ஊழி யர் நலன்புரிச்சங்கம், கிண்ணியா பிர தேச செயலாளருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது. கிண்ணியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உரிய சமுர்த்தி முத்திரைகளுக்கான பொருள் விநியோக அதிகாரத்தை, உத்தரவு பெற்ற கடைகளுக்கு வழங் கியதை ஆட்சேபித்தே முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கிண்ணியா பல நோக்குக் கூட்டு றவுச் சங்கத்தில் 53 ஊழியர்கள் கடமை செய்கின்றனர். இந்தச் சங்கம் சமுர்த்தி உணவு முத்திரையை நம்பியே இயங்குகின்றது. ஊழியர் களுக்கு மாதம் 2,500 ரூபா மட்டுமே சம்பளமாக வழங்கப்பட்டது. சமுர்த்தி முத்திரையில் பெரும் பகுதி உத்தரவு பெற்ற கடைகளுக்கு கைமாறியுள்ள தால் சங்கம் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்குகிறது. ஊழியர்கள் சிலரை வேலையிலிருந்து இடைநிறுத்தவும் முயற்சி எடுக்கப்படுகிறது. இது எமது வாழ்வாதார உரிமையை மறுக்கும் செயலாகும் என்று மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இரண்டாவது பிரதிவாதியாக திரு கோணமலை அரசாங்க அதிபர் மனு வில் குறிப்பிடப்பட்டுள்ளார். (ம)

# அவிசாவளைப் பகுதியில் தோட்ட முகாமையாளர், மற்றொருவர் கொலை!

## பங்களா அருகில் பிணங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு,ஓக.2

அவிசாவளைப் பொலீஸ் பகுதி யைச் சேர்ந்த கலட்டுவாவ தோட்ட மொன்றின் தோட்ட முகாமையாளர் ஒருவர் உட்பட இருவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். யூ.கே.குண சிங்க, ரி.வேல் என்னும் இருவரே இவ்வாறு கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதி பர் ஒருவருக்குச் சொந்தமான 60 ஏக்கர் கொண்ட இத்தோட்டத்தின் பங் களா அருகிலேயே அவர்கள் இருவ ரும் கொலை செய்யப்பட்டுக் கிடந்த னர் எனக் கூறப்பட்டது.

கொலைக்கு கூரிய ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று அவிசாவளைப் பொலீஸார் தெரிவித் தனர். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தக் கொலைகள் நடைபெற்றிருக் கலாம் என நம்பப்படுகிறது.

புதன்கிழமை பகலே இக்கொலை கள் பற்றிய தகவல் பொலீஸாருக்கு கிடைத்திருக்கிறது.

தோட்ட பங்களாவுக்குள் இரண்டு துப்பாக்கிகளும் பணமும் இருந்த போதிலும் கொலைகாரர்கள் அவற்றை எடுத்துச் செல்லவில்லை. இதனால் தனிப்பட்ட பகை காரணமாக இக் கொலைகள் நடந்திருக்கலாம் என்று பொலீஸார் நம்புகின்றனர்.

இக்கொலைகள் குறித்து அவிசா வளைப் பொலீஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டிருக்கின் றனர். (ம)

### ஈச்சமோட்டைப் பகுதியில்

# அடாவடித்தனத்தில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு எச்சரிக்கை

அரியாலை,ஓக.2

யாழ். ஈச்சமோட்டைச் சந்திப் பகுதி யில் நின்று அடாவடித்தனங்களில் ஈடுபட்டதாக கூறப்படும் இரண்டு இளை ஞர்களை பொலீஸார் மடக்கிப் பிடித் தனர். பின்னர் அவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை ஈச்சமோட்டைப் பகுதியில் இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட இளைஞர்கள் மேற்படி சந்திப்பகுதியில் நின்று பல்வேறு அடாவடித்தனங்களில் ஈடுபடுவதாக அந்தப்பகுதி மக்கள் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்தனர்.

இதனை அடுத்து அந்த இடத்திற்கு சென்ற பொலீஸார் அடாவடித்தனங் களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இளை ஞர்களை மடக்கிப்பிடித்து கடுமையாக எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்ற தாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

# பசறை, பிபிலேகம வீடொன்றில் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் சிக்கின!

## விடுமுறையில் வந்த இராணுவ வீரர் தலைமறைவு!

பதுளை,ஓக.2

பசறைப் பகுதியில் உள்ள பிபிலே கம என்ற இடத்தில் ஒரு வீட்டைச் சுற்றி வளைத்த பசறைப் பொலஸார், ஆயு தங்கள் பலவற்றைக் கைப்பற்றினர். ஐந்து கைக்குண்டுகள், இரு துப்பாக்கி கள், ஐந்து தோட்டாக்கள் ஆகியவை அந்த ஆயுதங்களில் அடங்கும்.

தங்களுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்தே பொலீஸார் இச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக அவ்வீட்டு உரி மையாளரான டி.எம்.விஜயரட்ன (வயது-33) என்பவரைச் சந்தேகத்தின பேரில் பொலீஸார் கைது செய்துள்ள னர்.

இந்நபர் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டபோது தனது சகோதரன் இராணுவத்தில் சேவையாற்றியவர் என்றும் அவர்தான் இந்த ஆயுதங் களை தனது வீட்டில் பதுக்கி வைத் திருந்தார் என்றும் அவர் தெரிவித் துள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒரு விவசாயியாவார்.

விடுமுறையில் உள்ள அந்த இரா ணுவ வீரர் தலைமறைவாகியுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

பசறைப் பொலீஸ் பொறுப்பதிகாரி வசந்த சுகந்தவத்தை தலைமையி லான பொலீஸ் குழுவினர் இச்சம்ப வம் குறித்து தீவிர புலனாய்வில் ஈடுபட்டுவருகின்றனர்.

# வாக்காளர் அட்டவணை திருத்தக் காலம் இம்மாதம் 30ஆம் திகதிவரை நீடிப்பு

## சு.க.குழுவுடன் நடத்திய பேச்சில் இணக்கம்

கொழும்பு,ஓக.2

வாக்காளர் அட்டவணை திருத்தக் காலத்தை இம்மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்க தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க இணங்கி யுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் கடந்த புதன்கிழமை தேர் தல் ஆணையாளரைச் சந்தித்து விடுத்த கோரிக்கையின்போதே ஆணையாளர் கால எல்லையைப் நீடிக்க இணங்கினார்.

வாக்காளர் அட்டவணை திருத்தக் காலம் கடந்த 30ஆம் திகதியுடன் முடிவடையவிருந்தது.

சில கிராம சேவை அதிகாரிகள் தேர்தல் அட்டவணை திருத்தப் பணி யின்போது முறைகேடுகளில் ஈடுபடுத் தப்பட்டிருப்பது குறித்து தேர்தல் ஆணையாளருடன் ஆராய்ந்ததாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

### மாகாண அரச சேவையிலிருந்து

# பணிநீக்கப்பட்டோர் விவரம் அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.2

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரச சேவையில் இருந்து விலக்கப் பட்டு மீளச் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யத்தகாதவர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு, வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளா திருமதி கமலா சிவசிதம்பரம் வடக்கு - கிழக்கில் உள்ள சகல அரச திணைக்களங்களிடமும் இந்த விவ ரங்களைக் கோரியுள்ளார்.

இதற்கான பட்டியலை தயார் செய்து எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அவா கேட்டுள்ளார்.

பணியில் மீளச் சேர்க்கத்தகாத நபரின் பெயர், விலாசம், அவர் சேவை யில் இருந்து விலக்கப்பட்ட திகதி மற்றும் அது தொடர்பான விவரங் கள் ஆகியவற்றினை இந்த விவரம் உள்ளடக்கியிருக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி விவரங்கள் அந்தந்தப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக அனுப்பிவைக் கப்படவேண்டுமென்றும் தெரிவிக்கப் பட்டது. (ஒ-185)

## ஆங்கிலம் போதிக்க பிரிட்டனில் இருந்து பட்டதாரிகள்

பிரிட்டனில் இருந்து ஆங்கிலப் பட்டதாரிகள், வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு அழைக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கையினை கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச் சின் செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பாட சாலைகளில் ஆங்கிலமொழி, ஆங் கில இலக்கியம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் நோக்கிலேயே இவர்கள் அழைக்கப்படவுள்ளனர்.

முதற்கட்டமாக 32 ஆங்கில மொழிப் பட்டதாரிகள் வரவழைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-185)

## சிறுவர் உரிமை கருத்தரங்கு

தெல்லிப்பழை,ஓக.2

யாழ்ப்பாணம் சிறுவர் உரிமை பாதுகாப்பு குழுவினால் நாளைமறு தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங் கொன்று இராமநாதன் கல்லூரி மண் டபத்தில் நடத்தப்படவுள்ளது. (ஒ-150)

# சுகாதார ஊழியர் மெத்தனத்தால் சுன்னாகம் பகுதியில் துர்நாற்றம்

வலி.வடக்கு,ஓக.2

வலி.தெற்கு பிரதேச சபை சுகாதா ரப் பகுதி ஊழியர்களின் மெத்தனத் தால் சுன்னாகம் பஸ் நிலையப்பகுதி மற்றும் மீன்சந்தைப் பகுதியில் துர் நாற்றம் வீசுவதாகக் கூறப்படுகிறது.

பஸ் நிலையப் பகுதியில் உள்ள கழிவுநீர் வாய்க்காலில் அழுக்குகளை அள்ளி - வாய்க்கால் ஓரமாக - வீதி யில் ஊழியர்கள் குவித்து விட்டுச் செல்வதாகவும் -

இதனால் அப்பகுதியில் துர்நாற்றம வீசுவதாகவும் -

பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதேபோன்று சுன்னாகம் மீன் சந்தையில் உள்ள கழிவுப்பொருள்கள் மற்றும் வாழைக்குலைச் சந்தைப் பகுதியில் உள்ள கழிவுகளை வீதி யோரங்களில் அள்ளி குவித்துவிட்டுச் செல்வதன் மூலம் அப்பகுதியில் குடி யிருக்கும் பொதுமக்கள் அதிக சிர மங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

அகற்றப்படும் கழிவுப்பொருள் களை சேர்ந்து கிடக்கவிடாது உடனடி யாக அப்புறப்படுத்தினால் மோசமான சுகாதாரச் சீர்கேடு உருவாவதைத் தடுக்கலாம் என்று கூறப்படுகிறது. (ஒ-86)

### வழக்குகளை நடத்தி முடிக்க

# மல்லாகம் நீதிமன்றத்தில் மாலை வரை விசாரணைகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் கடந்த சிலவாரங்களாக மாலை ஆறு மணிவரை இயங்கி வருகின் றது.

நீதிமன்றத்தில் உள்ள வழக்கு களை விசாரித்து முடிப்பதற்காக பணி நேரம் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

காலை 9மணிக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன.

காலையில் நாளாந்தம் சிறிய வழக்குகளின் விசாரணைகள் முடிவ டைந்த பின்னர் நண்பகலுக்கு மேல் நீண்டகாலமாக விசாரணையில் இருந்துவரும் வழக்குகள் விசார ணைக்கு எடுக்கப்படுகின்றன.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் இடம்பெற்று வரு கின்றன. (ஒ-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda GL 145(Luxuary Sport), Japan விற்பனைக்குண்டு தொடர்பு: மா.ஞானேஸ்வரன், வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை மாவடி. பார்வையிடும் நேரம்: பி.ப. 2.00 மணிக்குப்பின். (20950)

3 சிறி மொறிஸ் மைனர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 74, சட்டநாதர் கோவில் வீதி (சிறுவர் இல்லத்திற்கு அருகில் - பின்புறமாக), நல்லூர். (20243)

முதுமையடைந்த இரண்டு வேப்ப மரங்களும் பலகை மரத் துண்டுகள் இருக்கை பலகை மற்றும் வீட்டுப் பாவனை பொருள்களும் விற்பனைக் குண்டு. சனி, ஞாயிறு காலை 6 மணிதொடக்கம் மாலை 6மணிவரை பார்வையிடலாம். தொடர்பு: இல.55, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.(20938)

4 SRIXXXX தொடரிலக்கமுடைய மொறிஸமைனர் கார் விற்பனைககுண்டு தொடர்பு: இ.முருகானந்தன், முதலாம குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்பபாணம். (20963)

## வீடு, காணி விற்பனைக்கு

கோப்பாய்ச் சந்திக்கும் கிறிஸ்தவ கல்லூரிக்கும் இடையில் பருத்தித்துறை வீதியில் திருத்தக்கூடிய நிலையில் உள்ள வீடு எட்டு (08) பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 111312

(C/29235)

## வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் றோட் சந்திக்கும் நல்லூர் குறுக்குத் தெருவுக்கும் இடையில் நாவலர் வீதியில் 51/2 பரப்பு காணியில் ஆறு அறைகளுடன வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0777-111312. (சி-29247)

## கோழிக்குஞ்சு விநியோகம

Prima பேட்டுக்குஞ்சுகள் 04.08.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும் ஒரு குஞ்சுக்கு ரூபா 10/- கோழித் தீனுக்காக வைப்புப் பணமாக அறவிடப்பட்டு திரும்பத் தரப்படும் தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (20841)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும் 1970ஆம் ஆண்டு பிறந்த, அரசாங்க திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராக கடமையாற்றுபவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: விளம்பர இல.1968 (20933)

1971 டாக்டருக்கு இரண்டில் செவ்வாய், கிரகபாவம் நாற்பது, சித்திரை நட்சத்திரம் கணம், யோனி பொருத்தமுள்ள டாக்டரல்லாத மணப்பெண்ணைத் தாயார் தேடுகின்றார். முழு விவரம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1970, C/o உதயன். (20957)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், பிரபல வர்த்தகர் 1965, கிரகபாவம் நாற்பது, செவ்வாய் தோஷமற்றவருக்கு பொருத்தமான மணப்பெண்ணை சகோதரி தேடுகின்றார். ஜாதகம் மற்றும் முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1969 C/o உதயன். (20956)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடா பிரஜாவுரிமையுள்ளவரும் தற்போது இங்கு சொந்தமாகத தொழில் புரிபவருமான செவ்வாய்க் குற்றமற்ற, 40 வயது மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் படத்தையும் இணைத்து அனுப்பவும். விளம்பர இல. 1967, C/o உதயன், யாழ்ப்பாணம். (20907)

## இசைக்குறிப்புகள்

ஓகன், வயலின், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள் (பாகம I-II) வெளிவந்துள்ளன. தொடர்பு: 75, கோயில் வீதி (நல்லூர் கந்தசாமி கோவிலில் இருந்து 500m தெற்கே), T.P. 0777 031293 (பதிவுத் தபாலிலும பெறலாம்). (20548)

## வகுப்புகள்

6 மாத காலத்தில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில, ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி (காலை வகுப்புகள்) பிளாக் வீதி, சங்கானை. (மாலை வகுப்புகள்), 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (20936)

## தவறிவிட்டது

இல. 79, சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி பெனிக்னா றூபினி அருளப்பு அவர்களின் தே.அ.அ(இல. 625533317V), வி.அ.அ., உத்தியோக அ.அ. என்பன யாழ்ப்பாணத்தில இருந்து ஊர்காவற்றுறை நோக்கி பயணஞ்செய்த (பாதை இல.777) பஸ்ஸிறகுள் 23.07.2003 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (20928)

வட்டு.கிழக்கு, சித்தன்கேணியைச சேர்ந்த கதிரவேலு இராசரத்தினம் என்பவருடைய தேசிய அ.அ. (இல. 482293794V), விசேட அ.அட்டை என்பன கீரிமலை தீர்த்தக்கரையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (20954)

## O/L கணிதம்

O/L இற்குரிய சகல அலகுகளும ஆரம்ப அறிவிலிருந்து கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினாவிடை வகுப்புக்களும 40 மணித்தியாலங்களில் A பெறுபேறு அடைவதற்கு நிறைவேற்றப்படும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி (சந்திக்கும் நேரம் காலை 6.00 - 9.00). (20824)

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் 21/4 பரப்புக் காணியில் அமைந்த புதிய கல்வீடு வளவுடனும் பயன்தரும் மரங்களுடனும் சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

1) **K.P.Travels**
சங்கரத்தைச் சந்தி,
வட்டுக்கோட்டை.

2) **Smart Prints**
717. கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

(20967) (26)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகம் வர்த்தக சங்கத் தலைவரும்,
யாழ். மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் பொறுப்பாளரும்,
சண்றாஜ் கொம்பிளெக்ஸ் உரிமையாளரும்,
சிறந்த சமூக சேவையாளருமான

திருமிகு

## நடராசா சண்முகவேல

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளமையையிட்டு மன மகிழ்வுறுவதுடன் அவரது பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

பருத்திக்கலட்டி,
சுன்னாகம். (சி-29250)(21-19-12)

நாகலிங்கம் முருகையா
குடும்பம்.

## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

# முக்கிய அறிவித்தல்

## முன் அனுமதி பெறாது மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடத்தல்

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட "நீர்வேலி சவாரித் திடலில்" எமது சபையின் முன்னனுமதி பெறாது மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிக்கான நுழைவுச்சீட்டுக்கள் வழங்கி, அதன்மூலம் பெருமளவு வருமானம் பெற்றுவருவதாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

இச்செயலானது களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்திற்கு முரணான செயலாகும். ஆகவே, இப்போட்டியை நடத்துபவர்கள் உரியமுறையில் எமக்கு விண்ணப்பித்து முன்னனுமதி பெற்ற பின்னரே இப்போட்டியை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்பதைச் சகலருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

இச்செயலை மீறுவோர் மீது உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

க.வெங்கடாசலம்
செயலாளர்
வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

வலி.கிழக்கு பிரதேச சபை.
தலைமை அலுவலகம். நீர்வேலி.
30.07.2003 (c/29251) (15)

# நடமாடும் இலவச கண்பரிசோதனை முகாம்

## உங்கள் கண்களை நாங்கள் காப்போம்

- உங்கள் கண்களை இலவசமாக பரிசோதனை செய்வதற்கும்
- சகல வகையான மூக்குக்கண்ணாடிகளையும் விசேட கழிவு விலையில் பெற்றுக்கொள்வதற்கும்
- கண் பார்வையற்ற பொதுமக்கள் அனைவரையும் அழைக்கின்றோம்



இடம்: **அச்சுவேலி மத்தியமகாவித்தியாலயம்**
நேரம்: **காலை 9.30** (புதிய நேரம்)
காலம்: நாளை (03.08.2003) **ஞாயிற்றுக்கிழமை**





**துஷா மூக்குக் கண்ணாடி விற்பனையாளா**
544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3461

(26-21-19-12) (C/29248)



உ

## தாவடி
# ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோவில்
# சுபானு (2003) வருட மஹோற்சவம்

மஹோற்சவ குரு: **பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவக்குருக்கள்**
(நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் பிரதம குரு)

### முக்கிய நிகழ்வுக் கிரமம்

| | | | |
|---|---|---|---|
| 03-08-2003 | ஞாயிறு முற்பகல் | 11.00 மணி | கொடியேற்றம் |
| 08.08.2003 | வெள்ளி காலை | 9.00 மணி | தைலாம்பியங்க அபிடேகம் |
| 10.08.2003 | ஞாயிறு பிற்பகல் | 1.00 மணி | வேட்டைத் திருவிழா |
| | இரவு | 8.00 மணி | சப்பறப் பவனி |
| 11.08.2003 | திங்கள் காலை | 9.05 மணி | திருத்தேர் பவனி |
| | முற்பகல் | 11.00 மணி | சண்முகார்ச்சனை |
| 12.08.2003 செவ்வாய் | காலை | 9.00 மணி | தீர்த்தவாரி, யாக தரிசனம் |
| | | 11.00 மணி | யாககலச அபிடேகம் |
| | மாலை | 6.00 மணி | கொடியிறக்கம், மௌன உற்சவம், சண்டேஸ்வர உற்சவம், ஆசாரிய உற்சவம். |
| 13.08.2003 புதன் | முற்பகல் | 11.00 மணி | அபிடேகம். |
| | மாலை | 4.00 மணி | திருக்கல்யாணம் |
| 14.08.2003 வியாழன் | காலை | 11.00 மணி | பிராயச்சித்த அபிடேகம் |
| | மாலை | 3.30 மணி | பைரவர் பொங்கல |

விநாயகப் பெருமான், திருமுருகன்திருவோலக்கமும் திருவீதி உலாவும் கண்டு தரிசித்து எண்ணியவை கைகூடப் பெற்றிட அடியார்களை அழைக்கின்றோம்.

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோவில். தாவடி தெற்கு. (20964)

– கோவில் பரிபாலன சபையினரும் உபயகாரர்களும்.

(21-25-12-19)

# 33ஆவது நாள் நினைவு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1927 - 07 - 08 | 2003 - 07 - 01 |

## திருமதி செல்லர் செல்லம்மா

மாதம் ஒன்றாச்சோ அம்மா என்ற மொழி நாம் மறந்து?
மாதம் ஒன்றாச்சோ உன் அன்பு மொழி நாம் கேட்டு?
மாதம் ஒன்றாச்சோ உன் அறுசுவை உணவை நாம் மறந்து?
அம்மம்மாஎன்று கதறும் உன் பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகளுக்கு
ஆறுதல் கூற யாரம்மா அவனியில் உண்டு கூறம்மா?
மாதம் ஒன்றென்ன ஆயிரம்தான் சென்றாலும்
ஆறுமோ எம் துயர்
*உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.*

(26-21-12-19)

துயரால் பிரிவுறும்:
அன்பு மருமகன். மகள் (அஞ்சலிதேவி),
சகோதரர்கள். மச்சாள்மார்.
பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (20969)

# மரண அறிவித்தல்

## சின்னப்பொடி சின்னத்தம்பி

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் கோயிலாமனையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி சின்னத்தம்பி அவர்கள் 31-07-2003 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பொடி தம்பதிகளின் அன்பு மகனும் பகீரதியின் அன்புக் கணவரும் சரஸ்வதி, கார்த்திகேசு, நாகேஸ்வரி, சிவகாமி, லலிதாதேவி (ஆசிரியை, யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை), கனகரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னத்துரை, சிவஞானம், தங்கராசா, ரவிதாஸ் (பல நோ.கூ.சங்கம், சுன்னாகம்), இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் வேலாயுதரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-08-2003) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோயிலாமனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கோயிலாமனை, கொடிகாமம். (20970)(21-12-19)

# யாழ்.-பருத்தித்துறை பஸ் சேவை வரணி ஊடாக நடத்தப்படுமா?

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையினால் முன்னர் பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே வரணி, கொடிகாமம் ஊடாக பஸ் சேவையொன்று நடத்தப்பட்டது. தற்சமயம் இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது. இச்சேவை இடம்பெற்றபோது வரணிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் உட்படப் பலரும் பெரும் பயனடைநதனர். இச்சேவை இருந்தமையால் பொது மக்கள் சிரமமின்றி நேரகாலத்துடன் தமது அலுவல்களுக்கு யாழ்ப்பாணம் செல்லும் நிலை இருந்தது. இச்சேவை நிறுத்தப்பட்டதால் யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் கொடிகாமம் சென்று வேறு பஸ் மூலம் யாழ்ப்பாணம் செல்லவேண்டியுள்ளது. இதனால் வீணான சிரமங்களும் கால தாமதங்களும் ஏற்படுகின்றன.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ்.சாலை மேற்கொள்ளும் சேவைகளில் யாழ்ப்பாணம் - முகமாலை வழித்தடத்துக்கே முதலிடம் கொடுக்கப்படுகின்றது. அதேவேளை முகமாலையில் இருந்துவரும் பஸ்கள், மக்களால் நிரம்பி வழிந்து கொண்டே இருக்கும். இந்நிலையில் வரணி, கொடிகாமம் பகுதி மக்கள் தமது பயணங்களைத் திட்டமிட்டு மேற்கொள்ள முடியாதுள்ளனர்.

இந்நிலையில், வரணிப் பகுதி பயணிகளின் நன்மையை கருத்திற்கொண்டு யாழ்.சாலை அல்லது பருத்தித்துறைசாலை அதிகாரிகள் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வரை வரணி, கொடிகாமம் ஊடாக காலையும் மாலையும் பஸ்சேவை நடத்த முன்வருவது நன்மையபக்கும்.

அதேபோன்று, தனியார் பஸ் சேவையினரும் மேற்படி விடயத்தைக் கவனத்தில் எடுத்து ஆவன செய்தால் பயணம்செய்யும் மக்களின் சிரமங்கள் ஓரளவாவது நீங்கும்.

தற்போது நிலவும் பஸ் பற்றாக்குறை காரணமாக இத்தகைய சேவையை நடத்துவதில் போக்குவரத்துச் சபையினர் சிரமங்களை எதிர்நோக்க நேரிடலாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் வரை சேவையில் ஈடுபடும் பஸ் கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமருகே மாலை வேளைகளில் தரித்து அடுத்தநாள் காலை செல்வது வழக்கம். போக்குவரத்துச் சபையினர் இந்த பஸ்ஸை காலையில் வரணி எல்லையான கறுக்காயில் இருந்து சேவையை ஆரம்பிக்கச்செய்தால் இப்பகுதி மக்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். அத்துடன் பகலில் அச்சேவையை கறுக்காய் மட்டும் நீடித்தால் மக்களுக்கு நன்மையாக இருக்கும்.

**- சி.அருணா -**




தற்சமயம் யாழ்.சாலையினால் உசன்வரை ஒரு சேவை நடத்தப்படுகிறது. அதேபோன்று வரணிப்பகுதி வரை ஒரு சேவையை நடத்த சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும். இப்படியான சேவையொன்று முன்பு நடைபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விடயத்தை தனியார் மினி பஸ் சேவைச் சங்கத்தினரும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

எனவே, வரணிப்பகுதி பயணிகளின் நன்மை கருதி மேற்படி கோரிக்கையை நிறைவேற்ற வடபிராந்திய போக்குவரத்துச்சபை முன்வரவேண்டும்.



தமிழ் அரசியல் பிரமுகர் அமரர் சிவசிதம்பரத்தின் சிரார்த்த தினத்தையொட்டி கரவெட்டி தச்சை ஐங்கரன் சனசமூக நிலையத்தில் அன்னாரின் உருவப்படத்தை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் எஸ். விநாயகமூர்த்தி திரைநீக்கம் செய்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம் : வடமராட்சி செய்தியாளர்)*

# கோண்டாவில், உரும்பிராயில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

இணுவில்,ஓக.2

கோண்டாவில் வடக்கு, கிழக்கு, உரும்பிராய் மேற்கு மற்றும் இணுவில் கிழக்கு, காரைக்கால் ஆகிய பகுதிகளில் மீண்டும் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால், அப்பகுதிகளில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. கசிப்பை அருந்தி போதைக்குள்ளானவர்களால் வழிப்போக்கர்களுக்கு குறிப்பாகப் பெண்களுக்குத் தொல்லைகள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே, கோண்டாவில் டிப்போவிற்கு முன்வீதியில் அமைந்துள்ள பாடசாலையினதும் சென். செபஸ்தியார் வீதியில் அமைந்துள்ள பாடசாலையினதும் சுற்றாடலில் கசிப்பு, கோடா என்பவற்றின் துர்நாற்றம் வசுவதாலும், கசிப்பு அருந்தியோரின் கூச்சலாலும் மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கோண்டாவில், உரும்பிராய் பகுதிகளில் கசிப்பு அருந்தவருவோருக்கு மகிழ்ச்சியூட்டுவதற்காக சில இடங்களில் தொலைக்காட்சிகள் மூலம் சினிமாப் படங்கள் காண்பிக்கப்படுகின்றதாம்.

கோண்டாவில் ஆணித்தொழிற்சாலைப் பகுதியில் சில சமூக விரோதச் செயல்கள் இடம்பெறுவதற்கும் கசிப்பு விற்பனையே காரணமெனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.(ஓ-49)

# மானுடம் எங்கே செல்கின்றது?

**ந.நிறைந்தினி**
**யாழ்.பல்கலைக்கழகம்**

ஒரு மனிதன் பிறந்த காலம் தொடக்கம் இறக்கும்வரை எவ்வாறு வாழவேண்டும், அவனது கடமைகள் எவை, சமூகத்துடன் எவ்வாறான உறவினைக் கொண்டிருக்கவேண்டும் என்பன போன்ற நற்சிந்தனைகளையும், வழிகாட்டல்களையும் எமது மூதாதையர்கள், பெரியோர்கள் எமக்கு எடுத்துக்கூறியும் தமது வாழ்க்கையில பின்பற்றிக் காட்டியும் சென்றுள்ளனர். கிரேக்க சிந்தனையாளரான அரிஸ்டாட்டில் "மனிதன் ஒரு சமூகப் பிராணி" என்று கூறுகின்றார். இங்கு மனிதனானவன் தனது சமூகத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளவேண்டும் என்பது எழுதாத சட்டமாக உள்ளது.

காலந்தோறும் பல நற்கருத்துக்கள் அளிக்கப்பட்டபோதும் இன்று மனிதப் பண்பு எதை நோக்கி செல்கின்றது என்பது சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகிவிட்டது. பல்லாண்டு காலம் யுத்த சூழலிலே எண்ணற்ற உயிர்களை இழந்து, அங்கவீனர்களாகி, உறவுகளைப் பிரிந்து, சொந்த வாழிடம் இழந்து அகதிகளாகி மர நிழலிலே கல்வியைத் தொடர்ந்து இருண்ட சூழலிலே வாழ்ந்த நாம் விடியலை உணரமுற்படும்போது மனிதன் தன் பண்புகளை மறந்து மிருகப் பண்புகளைப் பின்பற்ற முயல்வது ஏன்? மானுடப் பண்பினை மறப்பது மனுக்குலத்தின் அழிவின் ஆரம்பப் படியாகிவிட்டது.

மானுடப் பண்பின் அபாயமான மாற்றத்தினை இன்று ஒவ்வொரு சமூக புலத்திலும் நடைபெறும் திடுக்கிடும் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. சிறுவர் உரிமைகள், எல்லோருக்கும் அடிப்படைக் கல்வி கொடுக்கப்படவேண்டும் என்று பல சட்டங்கள் இயற்றப்பட்ட போதிலும் சமூகத்தில் நடப்பதுதான் என்ன? சிறுவயதிலே தட்டிக்கொடுத்து கல்வியைத் தொடர உதவவேண்டிய சிறுவர்களை குடும்பத்தை சுமக்கச் செய்கின்றனர். கொட்டும் மழையிலும் வாட்டும் வெயிலிலும் சிறுவர்கள் கூலிவேலை செய்கின்றனர். இவர்களுக்கு அடிப்படைத் தேவைகளைக்கூட வழங்க குடும்பம் உதவுவது அரிதாகிவிட்டது.

இவை ஒருபுறம் இருக்க வேலியே பயிரை மேய்ந்த கதையாக வளர்ந தோரும் தமது பாலியல் இன்பத்தைத் தீர்க்க சிறுவர்களைக் கருவியாக்கிக் கொள்ளும் நிலை இன்று நிலவுகிறது; அன்றாட நடைமுறையாகிவிட்டது. இங்கு சிறுவர்கள் என்பது மட்டுமல்லாது ஆண், பெண் வேறுபாடும் தான் இல்லாது போய்விட்டது. பாலியல என்றால் என்ன என்பதை அறியும் முன்னே பாலியல் வல்லுறவு இன்று இது தொடர்கதைதான். ஒவ்வொரு மனிதனும் இத்துன்பத்தை சிறுவனாக தன்னை எண்ணி அனுபவத்தில் புரியும்போது தெரியும். துன்பம் இளைவிக்கப்படும் ஒவ்வொரு சிறுபிள்ளைகளும் எப்படி துடிக்கும் என்று அன்று இச்செயற்பாடு நடைபெற்றபோது கற்காதகுணம், காட்டுமிராண்டித்தனம் என்கிறோம். இன்று இதே செயலை கற்றவர்கள்கூட செய்யமுற்படும்போது இதனை எவ்வாறு அழைப்பது? இன்று படிப்பது தேவாரம். இடிப்பது சிவன் கோயில் என்பது நடைமுறைக்கு சாத்தியமானதொன்றாகிவிட்டது. இன்றைய சிறுவர்களே நாளைய தலைவாகள் என்பதை நாம் மறந்து விடுகிறோம். ஆனால், இன்று இத்துன்பத்தை அனுபவித்த ஒவ்வொரு சிறுவரும் நாளை எத்தனை சிறுவர்களை இத்துன்பத்திற்கு உட்படுத்துவார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



சுன்னாகம் பிரதேச சபைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு பிரதேச சபையால் ஆறு தொடர் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை வீதியில் கட்டப்பட்ட இவ்வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் உடுவில் உதவி பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, சுன்னாகம் பிரதேச சபைச் செயலாளர் ந.சிவபாலதர்மகுலசிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். உடுவில் உதவி பிரதேச செயலர் த.தேவராஜனும் படத்தில் காணப்படுகின்றார்.

*(படம் : வலி.தெற்கு செய்தியாளர்)*

இதுமட்டுமா? சிறிய தவறுகளுக்கு சுடுகோலால் சுடுதல், தவறான உறவினால் குழந்தை பெற்று குழந்தை உலகைப் பார்க்கும்முன் விட்டோடல், களவெடுக்க பயிற்சி அளித்தல் போன்ற செயற்பாடுகள் அதிகரிக்கிறது. முன்மாதிரியாக இருந்து வழிகாட்டவேண்டிய குடும்பங்கள்கூட மனிதப் பண்பை மறந்துவிடுகின்றன. இன்று மிகவும் வேதனைக்குரிய ஒன்று, ஒருசில சிறுவர் பாதுகாப்பு இல்லங்கள் கூட சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு துணைபோவதுதான். இங்கு மானுடம்தான் எதை நோக்கிச் செல்கின்றது என்பது புரியாத புதிராக உள்ளது.

மேலும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற எமது பண்பாட்டை மனிதர்களில் பலர் இன்று மறந்துவிட்டனர். மனைவி இருக்கும்போதே இன்னொரு பெண்ணுடன் தொடர்பினை வைத்திருத்தல், மனைவி கருவுற்றிருக்கும் போது இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்தல், மனைவியின் உழைப்பிலே மதுவுக்கு அடிமையாகும் கணவன் என்ற செயற்பாடுகள் ஒருபுறம் இருக்க, தான் பெற்றெடுத்த பிள்ளைகளை நட்டாற்றில்விட்டு தான் விரும்பியவருடன் செல்லும் தாய், திருமணம் ஆகாது கருவுற்று, கருவினை அழிக்கும் சகோதரிகள் என்ற செயற்பாடுகளும் இன்று வளர்ச்சியடைந்த வண்ணம் உள்ளது. சமூகம் வளர்ச்சியடைந்து வருகிறது. மனிதன் முன்னேறிவிட்டான் என்று ஆய்வுகள் கூறுகின்றன. இதுதான் மனித முன்னேற்றமா? இதுதான் மானுடப் பண்பா? யார் காண்பார் இவற்றுக்கு ஒரு தீர்வை?

ஒவ்வொரு பெற்றோரும் தனது பிள்ளையைக் கற்பிக்கும்போதும் பிள்ளை நல்ல தொழில் பார்க்க வேண்டும், தனக்கு புகழ் கிடைக்க வேண்டும் என்ற ஒரு நோக்கினை அடிப்படையாகக்கொண்டே பல கஷ்டங்களின் மத்தியில் படிக்க வைக்கின்றனர். ஆனால், இன்று எத்தனை பெற்றோர்களின் இவ்வாசை நிறைவேறுகின்றது? படிப்பை முடிப்பதற்குத் தேவை பணம் என்பதைவிட தொழில் எடுப்பதற்கு பணம் தேவை என்பது இன்றுள்ள புதுக்கதை. வறுமையில் கஷ்டப்பட்டு கல்விகற்றவன் தெருவில் திரிய, பணம் உள்ளவன் பதவியில் இருப்பதுதான் இன்றுள்ள மானுடப்பண்பு. போட்டிப் பரீட்சை, நேர்காணல் என்பவற்றின் மூலம் தொழிலைப் பெறமுடியும் என்பதை நாம் உறுதியாகக் கூறுவதைவிட பின்கதவினூடாக தொழிலைப் பெறமுடியும் என்பது உறுதியான நமபிக்கை. தகுதி இல்லாதவர் பதவியல் இருப்பதுதான் இன்றுள்ள மானுடப்பண்பு. பிள்ளையின் நல்ல எதிர்காலத்தை மட்டும் கருத்திற்கொண்டு தம்மையே தியாகம் செய்த எத்தனை உயிர்களின் தியாகம், அவர்களின் ஆசைகள் மானுடப்பண்பிற்கு புறம்பானவர்களின் செயற்பாட்டால் நசுக்கப்படுகின்றது. இதனால், எத்தனை உயிர்கள் வீணாகிப் போகின்றது என்பதை ஏன் மறந்துவிடுகின்றது இந்த மானுடகுலம்?

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற முதுமொழிக்கு இணங்க தனது பிள்ளை தனது முதுமைக்காலத்தில் பாதுகாக்கும் என்று எண்ணி ஒவ்வொரு பிள்ளையையும் வளர்க்கும் பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் கொடுக்கும் பரிசு முதியோர் இல்லங்கள்தான். "அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல்" என்பது இன்றுள்ள புதுமொழி. பெற்றோர் இருககும் முதியோர் இல்லங்களுக்கு பணத்தை கொடுப்பதன் மூலம் பெற்றோர்கள் துன்பம் இல்லாது இருப்பார்கள் என்று அதிகமான பிள்ளைகள் எண்ணுகின்றனர். ஆனால், பணத்தைவிட பிள்ளைகளின் அன்பான வார்த்தையே அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் என்பதை ஏன்தான் இவர்கள் உணரவில்லையோ தெரியாது. "சாவோலை விழ குருத்தோலை சிரிக்குமாம்" என்ற பழமொழியை மனிதர்கள் உணர்ந்தால் முதியோர் இல்லங்களின் அதிகரிப்பு குறைவடையும் என்பது உண்மை.

இன்று பேருந்தில் பயணம் செய்யும போது முதலில் ஏறுபவர்களுக்கு ஆசனங்கள் கிடைக்கின்றன ஏனையோருக்கு ஆசனங்கள் கிடைப்பதில்லை. ஆனால், இடையில் ஏறும் வயோதிபாகள், கர்ப்பிணிப் பெண்கள், நோயாளர்களுக்கு ஆசனத்தில் இருப்போர் தமது இடத்தை அளிப்பது மனித இயல்பு. இன்று இத்தன்மை குறைவடைந்து செல்வதை காணலாம். அதாவது "நாங்களும் பணம் கொடுததே செல்கின்றோம்" என்ற மனவுணர்வை மனிதர்கள் பெறுகின்றனர். மனிதர்களாகிய நாம் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். "இன்று ஒருவர் நாளை நான்" என்பதை மனிதர்கள உணரும்போது மனிதன் மானுடனாக வாழமுடியும்.

இன்று மனிதன் எதையும் செய்யலாம். எப்படியும் வாழலாம் என்ற கற்கால பண்பாட்டினை நோக்கிச் செல்வதை அவனது செயற்பாடுகள் காட்டுகிறது. அன்று மிருக குணத்தில் இருந்த உயிரி, கால ஓட்டத்தில் சமூகவிருத்தி காரணமாக நற்பண்புடைய மனிதனாக மாறினான். ஆனால், இன்று மீண்டும் கற்கால மனிதனாக மாறிக்கொண்டு வருகிறான். தனது பண்புகெட்ட செயற்பாடுகளால் ஐந்தறிவு படைத்த காகம் உணவு உண்ணும் போது தனது இனத்தை அழைக்கின்றது. நாய தனது எஜமானைக் கண்டதும் வாலாட்டுகிறது. ஆனால், ஆறறிவு படைத்த மனிதனோ இன்னொருதனின் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாகி விடுகிறான்.

தனி ஒரு மனிதனின் தவறான செயற்பாடுகள் காரணமாக மனித குலமே அவமானப்படவேண்டிய நிலை ஏற்படுகின்றது. எமது சமூகத்திலேயே எத்தனையோ உயர் பண்புடைவர்களைப் பார்க்கின்றோம். ஒரு மனிதனின் செயற்பாட்டினால் எல்லா மனிதர்களையும் நாம் தவறாக நினைக்க வேண்டிய நிலைமை இன்று தோன்றிவிட்டது. ஒவ்வொரு மனிதனும் நான் நல்லதை செய்யவேண்டும்; நல்வழி நடக்க வேண்டும் என்ற உணர்வை மனதில் பதிக்கும் கணப்பொழுதிலேயே மனிதகுலம் மேம்பாட்டை நோக்கி செல்லத் தொடங்கிவிடும். ஒவ்வொரு மனிதனும் தனது ஒவ்வொரு பிழையையும் ஏற்று திருந்த நடக்க முயலாவிட்டால் மனித குல முன்னேற்றம், மானுடப் பண்பு என்பது மேன்மையடையாது.

# சேவை நிறைவு வாழ்த்து



அரச சேவையில் ஊழியராகச் சேர்ந்து, பின் உத்தியோகத்தராகி, அதிகாரியாகி அத்துடன், வலி. கிழக்குப் பிரதேச சபை செயலாளராக இருந்து 30-07-2003 அன்று ஓய்வுபெற்ற

**திரு. செல்லையா குகதாஸன்**

அவர்கள்

சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**தம்பையா குடும்பத்தினர் (மருமக்கள்)**

விநாயகர் வீதி, நல்லூர். (20973)(14-16-31)

## மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் முதலாவது பதவியேற்பு வைபவம்



**பிரதம விருந்தினர் Rtn.K.சுரேந்திரன்**
**(தலைவர், யாழ். றோட்டறிக்கழகம்)**
**கௌரவ விருந்தினர்**
**DRR.Rtr.PP ருஷ்டிஜெகான்**
**(மாவட்ட றோட்டறக்ட் பிரதிநிதி)**

இடம் : மானிப்பாய் பிரதேச சபை மண்டபம்
காலம் : 02.08.2003 (சனிக்கிழமை)
நேரம் : பிற்பகல் 2.00 (பு.நே.)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

மானிப்பாய் றோட்டறக்ட் கழகம். செயற்றிட்ட இயக்குநர்.

(சி-29252) (31-14-16)

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி ஜெயராணி வரதராஜா**

எமது பாடசாலையின் சமூகக்கல்வி ஆசிரியை

**திருமதி ஜெயராணி வரதராஜா அவர்கள்**

காலமானதையிட்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி.
சீரணி, சண்டிலிப்பாய். -பாடசாலைச் சமூகம்.

(C29255) (32-14-16-31)

## துயர் பகிர்கின்றோம்

உடுப்பிட்டி இமையாணன் வீரகத்திப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த எமது குடும்ப நண்பர்

**வே. தங்கவேலாயுதம்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**அருணாசலம் வேலும் மயிலும் (செல்லப்பா)** அவர்கள் 31.07.2003 வியாழக்கிழமை இறைவன் திருவடிகளை எய்திவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல தீர்த்தாங்குளப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன், அவரது பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொட்டியவளை, தி.இரத்தினசபாபதி
பத்தமேனி, (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
அச்சுவேலி. (20982) (32-14-16-31) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா இராசமணி

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் இல. 3, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இராசமணி அவர்கள் 31.07.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா அவர்களின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.3, சிவப்பிரகாசம் வீதி, தகவல்:
யாழ்ப்பாணம். N.செல்வராசா (மகன்).
(20978)(14-16-31)

## பொன்னையா ஐயர் இலட்சுமி அம்மா

அராலியை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா ஐயர் இலட்சுமி அம்மா அவர்கள் நேற்று 01.08.2003 பகல் 3 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா ஐயாவின் அன்பு மனைவியும் அராலி வண்ணபுரம் சிவன்கோயில் சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் மாமியாரும் மீனாட்சியம்மாவின் சிறிய தாயாரும் சிவகணேசக் குருக்கள், ஸ்ரீ கோபாலக்குருக்கள் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2003) சனிக்கிழமை பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூனாவளை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

க. சிவசுப்பிரமணிய சர்மா. தகவல்:
வண்ணபுரம் சிவன் கோவில், அராலி மத்தி, க.சிவசுப்பிரமணியக்
வட்டுக்கோட்டை. (20987) (31-14-16) குருக்கள்.

# சமய சந்நிதிகளில்

வல்வெட்டித்துறை ஆதிவயிரவர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. நாளை முதல் தொடர்ந்து 10 நாளகளுக்கு நடைபெறும் இவ் உற்சவ நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதியுடன் நிறைவுபெறும். (ஓ-15)

★★★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளைமறுநாள் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 18நாள்களுக்கு நடைபெறும் இவ் உற்சவ நிகழ்வுகளில் எதிர்வரும் 20ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

திருவிழாக்காலத்தில் தினமும் இரவு 7 மணி தொடக்கம் 8மணி வரை 'இராமாயணம்' என்றும் பொருள் பற்றி இரா. செல்வவடிவேலின் தொடர் சொற்பொழிவு நடைபெறும். (ஓ-15-28)

★★★

அளவெட்டி கணேஸ்வரக் குருக்கள் கனாற்றடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஓ-30)

★★★

கோப்பாய்,ஒக.1

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும். எதிர்வரும் 10 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ஓ-72)

அனலைதீவு நயினாகுளம் அரிகர புத்திர ஐயனார் ஆலய மஹோற்சவம் நாளை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை தேர்த்திருவிழாவும் 12ஆம் திகதி காலை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். திருவிழா நாள்களில் தினமும் காலையும், மாலையும் கண்ணகை அம்மன் இறங்குதுறைக்கும் அனலை தீவுக்கும் இடையில் படகுச்சேவை இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-30-117)

★★★

தென்மராட்சி,ஒக.2

மீசாலை வெள்ளைமாவடி திருநீலகண்டப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. (ஓ-10-117)

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள கீரிமலை வலித்தூண்டல் புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழா நாளை மாலை 3.30 மணிக்கு நடைபெறும்.

இவ் ஆலயத்திற்கு செல்லவிரும்பும் மக்களை சேந்தாங்குளம் சந்தியில் ஒன்று கூடுமாறும் - அங்கிருந்து இராணுவ வாகன வழிகாட்டலுடன் ஆலயத்திற்கு அழைத்து செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் - பங்குத்தந்தை அருட் திரு. பொனிபஸ் அடிகள் தெரிவித்துள்ளார். (ஓ-30)

★★★

யாழ்ப்பாணம்,ஒக.2

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட துர்க்காபுரம் ஸ்ரீ ஞான துர்க்கை அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது. (ஓ-10)

## காவடி விழுந்து யுவதி காயம்

யாழ்ப்பாணம்,ஒக.2

காவடிப் பவனியில் கலந்துகொண்ட இளம் பெண் ஒருவர் காவடி தவறி விழுந்ததில் காயமடைந்தார்.

ஆவரங்கால் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச்சேர்ந்த கனகரட்ணம் சதத்தியப்பிரியா (வயது-21) என்ற யுவதியே காயமடைந்தவராவார்.

இக்காவடிப் பவனியில் கலந்து சென்ற இப்பெண் மீது பக்தர் ஒருவர் எடுத்துச்சென்ற காவடி தவறி விழுந்ததாகக் கூறப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-15)


**படிவம்**

ஆசிரியர் கல்வியில் தொழிற்பயிற்சி நெறி ஒன்றைப் பயில்வதற்குத் தேசிய கல்விக் கல்லூரிகளுக்கான அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

முடிவு திகதி : 01-09-2003

BHARATHI PATHIPPAKAM,
OFFSET PRINTERS,
430, K.K.S. ROAD,
JAFFNA.

(C29264) (32-14-16-31)



**சொலெக்ஸ் மூக்குக் கண்ணாடியகம்**
**லக்ஷறி பல்கட்டு நிலையம்**

**முதலாம் ஆண்டு பூர்த்தி**

எமது தென்மராட்சி சேவையின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு எம்மிடம் பெற்றுக்கொள்ளும் அனைத்து சேவைகளிற்கும் 01.08.2003 தொடக்கம் 01.09.2003 வரை 15% விசேட கழிவு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

**நடமாடும் பல் கட்டும் சேவை**
1. வயது சென்றவர்களுக்கு நேரில் வீட்டிற்கு வந்து சீன முறையில் பல்கட்டித்தரப்படும்.
2. மிதப்புப் பற்களுக்கு கிளிப்செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசிச் சேவை**
1. மேசைத் தொலைபேசிகள், கையடக்கத் தொலைபேசிகள், காட், சிம்காட் இவற்றைப்பெற்றுக்கொள்ளவும் -
2. கண்களைப் பரிசோதித்து நவீன பிரேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பொருத்திப் பெற்றுக்கொள்ளவும் -

**தென்மராட்சியில் நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்.**

சொலெக்ஸ் மூக்குக் கண்ணாடியகம். லக்ஷறி பல்கட்டுநிலையம்.

T.P. : 0712 370247. கண்டி வீதி, சாவகச்சேரி சந்தி, சாவகச்சேரி.

(29249) (31-14-16)



**GNANA BEAUTY PARLOUR**
**(ஞானா)**

★Bridal/ Dance make up
★Facial For different types of skin
★Bleeching
★Manicure & Pedicure
★Hair styles
★Threading
★Waxing
★Wedding cake orders will be under taken.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.
162, ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.
Tel-021-222 2224
222 3885.

(C29258) (32-14-16)


## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து




**02.08.2003**

பிரான்ஸைச் சேர்ந்த கமலேஸ்வரன் - துஷ்யந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வன்

**டிலான்**

தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று (02.08.2003) சனிக்கிழமை தனது பிரான்ஸ் இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார். டிலானை பிரான்ஸில் வசிக்கும் அப்பா, அம்மா, தம்பி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பம்மா, அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், பிரான்ஸில் வசிக்கும் அம்மம்மா, அம்மப்பா, சித்தப்பாமார், மாமாமார், சித்திமார் ஆகியோர் நயினை நாகபூஷணி அருள் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

39/2, புதுவிதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல் : திருமதி சோமசேகரம் (அப்பம்மா).

(20980) (31-14-16)

# தனது அரசியல் வாழ்வை நீடிப்பதற்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் பிரயத்தனம்

**தனது ஜனாதிபதி பதவிக்காலம் முடிவடைய இன்னமும் இரண்டரை ஆண்டுக் காலமே மீதமுள்ள நிலையில், ஜனாதிபதி சந்திரிகா அரசியல் அரங்கில் மேலும் நீடித்திருக்கும் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பலவகை உபாயமார்க்கங்களைத் தேடி வருவதாகத் தெரிவிக்கிறார் கட்டுரையாளர் உபுல் யோசெப் பெர்னாண்டோ. 'லங்காதீப' நாளிதழில் வெளியான அவரது கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

அண்மையில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மாநாட்டில் ஆரவாரம் எதுவுமின்றிப் புதுமையான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அக்கட்சியின் சார்பில் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதியொருவர், தமது பதவிக்காலம் முடிவடைந்து பதவியிலிருந்து விலகிக்கொள்ளும்வேளை, வேறு தெரிவுமுறை எதுவுமின்றி நேரடியாகத் தாம் சார்ந்துள்ள கட்சியின் நிறைவேற்றுச சபையின் உறுப்பினராக நியமிக்கப்படவேண்டுமென்பதே அத்தீர்மானமாகும். கட்சியின் நிறைவேற்றுச்சபை, கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை உறுப்பினர்களாகக்கொண்டே உருவாக்கப்படுவதாகும். நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் சபையின் தலைவராகத் தம்மிடையே ஒருவரைத் தேர்ந்தெடுப்பர். இப்புதிய தீர்மானத்தின்படி ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவடையும் வேளையில் அவர் நேரடியாகவே நிறைவேற்றுச் சபையின் உறுப்பினராக ஆகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதன்மூலம் நிறைவேற்றுச்சபையில் அவருக்கும் அவரது தலைமைத்துவத்துக்கும் பாதுகாப்புக்கிட்டும்.

ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிககாலம் முடிவடைய கிட்டதட்ட 900நாள்கள் உள்ளன. நாளுக்குநாள், மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் இந்த எண்ணிக்கை குறைவடைந்து செல்லுமேயன்றி அதிகரிப்பு இடம்பெறப் போவதில்லை. இந்த எண்ணிக்கை 365நாள்கள் என்ற அளவுக்குக் குறைவடையும் வேளையில், அதற்குமேல் எதுவும் செய்துகொள்ள இயலாது. ஏனெனில், பதவிக்கால முடிவுக்கு ஒரு வருடம் முன்னராவது, அடுத்து இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் சார்பான வேட்பாளரைத் தெரிவு செய்தாகவேண்டும். இல்லையேல், கட்சியின் சார்பான அடுத்த ஜனாதிபதித்தேர்தல் வேட்பாளரை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு கட்சிக்குக்கால அவகாசம் போதாதிருக்கும். எனவே, அத்தகையதொரு சூழ்நிலை ஏற்படுவதற்கு முன்னர் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதைத் தவிர்த்துக்கொள்ள முயலவேண்டும். அப்படிச் செய்ய முடியாதுவிடின், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பான வேட்பாளரைத் தெரிவுசெய்யும் வேளையில், கட்சியினுள் தனது தலைமைத்துவத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள வழிதேடிக்கொள்ளவேண்டும். இதன் காரணமாகவே, அவர் நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்தில் கட்சியின் நிறைவேற்றுச்சபைக் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்தார்.

நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்தை அவரால் ஒருபோதும் மறந்துவிடமுடியாது. 1981இல் அவரது தாயாரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனது குடியியல் உரிமை பறிக்கப்பட்டு, தற்போது தனது மகள் சந்திரிகா எதிர்நோக்குவது போன்ற சிக்கலான பிரச்சினையை எதிர்நோக்கியிருந்த வேளையில், அவரும் சங்கபோதி வித்தியாலயத்துக்கே செல்ல நேர்ந்தது. அன்று தனது குடியியல் உரிமையை இழந்ததன் காரணமாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டவேளையில், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்தில் கட்சியின் அகில இலங்கை நிறைவேற்றுச்சபையில் கூட்டத்தைக கூட்டி கட்சியில் தனது தலைமைத்துவத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டார். அக்கூட்டம் 1981ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி இடம்பெற்றது. அதன் பின்னர் 1982 ஜனாதிபதித் தேர்தலின பின்னர் கட்சியின் அகில இலங்கை நிறைவேற்றுச் சபையைக் கூட்டி அரசமைப்பு ரீதியாக அதிகபட்ச அதிகாரங்களைக் கட்சித் தலைமைத்துவத்துக்கு வழங்குவதற்கான தீர்மானத்தையும் நிறைவேற்றிக் கொண்டார். இது 1983 ஜூலை மாதத்தில் இடம்பெற்ற நிகழ்வாகும். அக்கூட்டத்தைப் பகிஷ்கரித்த சந்திரிகா 1983ஓகஸ்ட மாதத்தில் கட்சியை விட்டு வெளியேறினார்.

1972 - 1973 காலப்பகுதியில் ஜனவாச ஆணைக்குழுவின் பணிப்பாளர் பதவிக்கு நியமனம் பெற்றதன் மூலம் ஸ்ரீ.ல.சு.கட்சியூடாக சந்திரிகா அரசியலில் பிரவேசித்தார். ஆனால்,1983ஆம் ஆண்டில் அவர் கட்சியை விட்டு விலகிச்செல்ல நேர்ந்தது. கட்சியை விட்டு விலகிசென்று 1983ஆம் ஆண்டுமுதல் 1993ஆம் ஆண்டுவரை அரசியலிருந்து அவர் விலகியிருக்க நேர்ந்தது. 1993இல் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றதுடன் மேல் மாகாண முதலமைச்சர் பதவியை ஏற்றதன் மூலம் சந்திரிகா மீண்டும் ஸ்ரீ.ல.சு. கட்சியினூடாகத் தன் அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

1993ஆம் ஆண்டுமுதல் இன்றுவரையில், முதலில் மேல்மாகாண முதலமைச்சர் பதவியில் ஆரம்பித்து பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிவரை உயர்ந்து சென்ற அவரது பயணத்துக்கு இன்னும் 900நாள்களின் பின்னர் இடம்பெறவேண்டியுள்ள ஜனாதிபதித்தேர்தல் பெரும் இடையூறாக அமைகிறது. என்ன செய்ய விரும்பினாலும் அதைச் செய்வதற்குக் குறுகியதொரு கால அவகாசமே மீதமாயுள்ளது.

சந்திரிகா என்ன செய்யப் போகிறார் என்று சந்திரிகாவின் இயல்பு பற்றி புரிந்துகொண்டுள்ள எவரும் கேள்வி எழுப்பமாட்டார்கள். சந்திரிகாவால் எதைத்தான் சாதிக்கமுடியாது என்றே சந்திரிகாவின் நடவடிக்கைகள் பற்றிச் சரியாக கணிப்பிட்டுள்ளவர்கள் வினா எழுப்புவார்கள்.

சந்திரிகாவுக்குச் சந்திரிகா என்ற பெயரைச் சூட்டியவர் அவரது தந்தையான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவே. சந்திரிகா பிறந்த சமயம் அவரது பெயர் நிலைத்து நிற்க வேண்டுமென்ற நோக்கத்தில் குளமொன்றுக்கும் சந்திரிகா என அவரது தந்தையாரால் பெயரிடப்பட்டது. அது ஒருகாலத்திலும் வரட்சியடையாத குளமாகும்.

சந்திரிகாவின் அரசியலும் அவ்விதமானதே. சூழ்நிலைத் தாக்கத்தால் அவரது அரசியல் வாழ்க்கையில் 1983ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டுவரை வரட்சி நிலையே நிலவியது. ஆனால், 1993 இல் இரு பக்கங்களாலும் பிரித்துக்கொண்டு சீறிப்பாய்ந்துவரும் குளம் போன்று, தனக்கு எதிரானவர்களையெல்லாம் பின்தள்ளி, தான் முன்னேறி வந்தார்.

மீண்டும் அத்தகையதொரு வரட்சிக்காலம் சந்திரிகாவுக்கு உருவாக்கப் போகிறதா?

வரட்சி நிலையொன்று உருவாகும் முன்னரேயே அதனை எதிர்கொள்ளத தயாராகவேண்டும். அதற்குத் தயாராகும் விதத்தில் சந்திரிகா இந்த நிறைவேற்றுச்சபை மூலம் தனது நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார். இது எங்கே போய் முடியப்போகிறது? சரியான விதத்தில் இடம்பெற வேண்டுமானால், அது வரலாற்றில் இடம் பெறாத வகையிலான விதத்தில் அரசைக் கவிழ்ப்பதன் மூலமே நிறைவேற்றிடமுடியும்.

உண்மையில் முன்னர் ரவூப்ஹக்கீம் மூலமே சந்திரிகாவின் அரசை வீழ்த்தும் முயற்சியை ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்தார். அத்தோடு 2002ஆம் ஆண்டு டிசெம்பரில் ரவூப்ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸினுள் தமது ஆதரவை இழக்க ஆரம்பித்தார். ஹக்கீமுக்குப் பின்னர் ரணில் சந்திரிகாவின் அரசை வீழ்த்தும் நோக்கில் ஆனந்தசங்கரியைத் தேர்ந்தெடுத்தார். இன்று ஆனந்தசங்கரியும் தமிழர் ஐக்கிய முன்னணிக்குள் தனக்குள்ள ஆதரவை இழந்துவிட்டார். கடைசியில் சந்திரிகாவின் அரசை வீழ்த்துவதற்கு ரணில் கைவைத்தது எஸ்.பி.திசாநாயக்க மீதாகும். இன்று எஸ்.பி.திசாநாயக்கவின் ராஜினாமாக்கடிதத்தின் மூலம் எஸ்.பி. திசாநாயக்கவைப் போன்றே அரசும் அமைதியற்ற நிலையில் காணப்படுகிறது.

இதை ஒரு புதுமையான ஒற்றுமையாகக் கருதமுடியும். 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வரவு செலவுத் திட்டம் சந்திரிகாவின் அரசினால் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானின் பயமுறுத்தலும் கர்ஜனையும் எழுந்தது. இதனையடுத்து சந்திரிகாவின் அரசு ஆட்டம் கண்டது. அதன் பின்னர் 2001 ஜூன் முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் அரசு படிப்படியாக வீழ்ச்சியுற ஆரம்பித்தது.



2002ஆம் ஆண்டில் முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிளவு பட்டதைத் தொடர்ந்து ரணிலின் அரசு ஆட்டம் கண்டது. எஸ்.பி.திசாநாயக்கவின் போக்கும், அரசு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து வருகின்றனர் என வெளிவரும் தகவல் மூலம் இன்று அரசு அமைதி இழந்துள்ளது.

எவ்வாறானபோதும் மூன்று மாத காலப்பகுதியும் சந்திரிகாவுக்கான சந்தர்ப்பமாகும். இம் மூன்று மாத காலப் பிரயாணத்துக்காக சந்திரிகா மூன்று பாதைகளைத் தேர்வு செய்துள்ளார்.

ஜே.வி.பியுடன் இணக்கப்பாடொன்றினை ஏற்படுத்திக்கொள்வது அவர் தெரிவுசெய்த முதலாவது வழியாகும். இந்த இணக்கப்பாடு எட்டப்படினும் சரி, எட்டப்படாவிட்டாலும் சரி, ஜே.வி.பியுடன் நல்லுறவைப் பேணிவருவதன் மூலம் ரணிலின் அரசைக் கவிழ்ப்பதற்கு ஜே.வி.பியின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே அவர் ஜே.வி.பியினருடன் பேச்சுக்களை மேற்கொண்டு வருகிறார்.

ரணில் விக்கிரமசிங்க பங்கேற்காத ஐ.தே.கட்சி அரசொன்றை நிறுவ முயல்வது மூலம் அந்த அரசை சிக்கல்களுக்குள்ளாக்கி ஐ.தே. கட்சியை இரண்டாகப் பிளவுபடச் செய்வதே அவர் தெரிவு செய்துள்ள இரண்டாவது வழியாகும்.

அவர் தெரிவு செய்துள்ள மூன்றாவது வழியும் கடைசி வழியும் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து தேசிய அரசொன்றை நிறுவ முயலும் எண்ணமாகும். மேற்குறிப்பிட்ட இம் மூன்று வழிமுறைகளிலும் சந்திரிகா இரண்டாவது வழிமுறை குறித்தே பெரிதும் அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிகிறது. எனவே, அந்த இரண்டாவது பாதையில் பயணத்தை தொடர்வதற்காக அப்பாதையைச் செப்பனிடும் பணியில் அவர் ஈடுபட்டிருப்பதாகத் தோன்றுகிறது. ஐ.தே.கட்சியின் வேறொரு சிரேஷ்ட தலைவருடன் இணக்கப்பாட்டை வளர்த்துக்கொள்வதன் மூலம் அவருக்குப் பிரதமர் பதவியை வழங்கி ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியினின்றும் அகற்றி கட்சிகள் சிக்கல்களை உருவாக்குவதே சந்திரிகாவின் திட்டமாகும். ரணிலைப் புறம்தள்ளி வைத்து வேறொருவரை பிரதமராக நியமிப்பதன்மூலம் கட்சியின் யாப்புக்கமைய அவரே கட்சியின் தலைவராகவும் ஆக முடியுமெனச் சந்திரிகா கருதுவதாகத் தோன்றுகிறது. அவ்வாறானதொரு நிலை ஏறபடுத்தப்பட்டால் ஐ.தே.கட்சிக்குள் குழப்பங்கள் உருவாகும். அக்குழப்பங்களைத் தொடர்ந்து விடயம் நீதிமன்றம் வரை எடுத்துச்செல்லப்படும் நிலை உருவாகும். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றக் கலைப்பு என்ற பயமுறுத்தல் மூலம் அரசமைப்புத் திருத்தத்துக்கு அவசியமான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப்பலம் பெற்று நிறைவேற்று ஜனாதிபதிமுறையை ஒழித்து, பாரம்பரிய ஜனாதிபதி முறையை உருவாக்கிக்கொள்வதன் மூலம் அப்பதவிக்கு ஐ.தே.கட்சியைத் தலைமைத்துவம் வகிப்பவரை நியமிப்பதுடன் தான் பிரதமர் பதவியை ஏற்று நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலொன்றை நடத்தி வெற்றியும் பெறமுடியுமென சந்திரிகா கருதுகிறார்.

இதற்கான பின்னணியை அவர் தற்போது உருவாக்கி முடித்துள்ளார். அதன் முதல் முயற்சியாக ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையே இரகசிய இணக்கப்பாடு இடம்பெற்று வருவதாகக் காட்டிக்கொள்வதன் மூலம் ரணிலுக்கும் ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுக்குமிடையே பேதத்தை உருவாக்கி, அவர்கள் மத்தியில் சந்தேகம் என்ற விஷவித்துக்களை விதைத்து அதன் பயனாக அவர்கள் கட்சிக்குள் ஓரம் கட்டப்படுவதற்கானதொரு சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் அவர்களுக்கு ஐ.தே. கட்சியின் மீதும் வெறுப்புணர்வை உருவாக்கி தமது பக்கம் அவர்களை வளைத்துப்போட்டுக் கொள்ளும் முயற்சியில் தற்போது சந்திரிகா இறங்கியுள்ளார். வெள்ள நிவாரண நடவடிக்கைக் குழுவினூடாக ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவரான கரு ஜெயசூரியவுடன் நெருக்கமான நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கில் அமைச்சுக்கான சட்ட மூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் அவற்றை ஜே.வி.பியினர் எதிர்த்து வாக்களித்த போதும் பொ.ஐ.முன்னணி அதனை எதிர்க்காத நிலைமூலம் சந்திரிகா தனது முதலாவது வெடித் திரியைப் பற்றவைத்துள்ளார். அத்தோடு ஜனாதிபதி ஐ.தே.கட்சியின் தலைவர்களுடன் இரகசிய ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளாரென செவிவழித் தகவல்களைப் பரப்பும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

தம்முடன் சிநேகபூர்வமாகப் பழகும் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் தம்முடன் இரகசியமாக ஒப்பந்தம் மேற்கொள்ள விரும்பும் உறுப்பினர்கள் இவர்கள் தாமெனக் குறிப்பிட்டு பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலொன்றினைப் பகிரங்கப்படுத்துவது சந்திரிகாவின் மற்றொரு திட்டமாகும். இதன்மூலம் ரணில் விக்கிரமசிங்க மற்றும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகிய இரு தரப்பினிலும் ஒரு தரப்பினர் மீது மற்றைய தரப்பினர்களுக்கு சந்தேகம் வளர்ந்து மோதல்கள் உருவாவது இயற்கையானதே. இம் மோதல்கள் அதிகரிக்கும் நிலையூடாக கட்சியிலிருந்தும் தலைமைத்துவத்திலிருந்தும் ஓரங்கட்டப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களை வளைத்து தன்பக்கம் இழுத்துக் கொள்வதொன்றும் சந்திரிகாவுக்குச் சிரமமான காரியமல்ல. தற்போது இத்தகைய பெயர்ப்பட்டியலொன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பட்டியல் வெளிவந்தமையால் ஐ.தே.கட்சிக்குள் அமைதியின்மை தோற்றமுறுவது புதுமையானதொன்றல்ல.

இந்த முறையிலான அவரது அணுகுமுறை வெற்றியளித்து வருவதாகத் தோன்றுகிறது. தம்மைச் சந்திக்கும் மற்றும் தம்முடன் நெருங்கிப் பழகும் ஐ.தே.கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியினாலும், கட்சித் தலைமைத்துவத்தாலும் ஓரங்கட்டப்பட வைப்பதற்கு அவருக்குக் கிடைத்துள்ள இச்சந்தர்ப்பம் பெறுமதிமிக்கதாகும். சந்திரிகா கருதும் விதத்தில் நிகழ்வுகள் இடம்பெறுமானால் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது ஐ.தே.முன்னணி அரசு மற்றும் ஐ.தே. கட்சி ஆகிய முழுத்தரப்பும் வீட்டுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை உருவாகும். சந்திரிகா கருதும் வகையில் நிகழ்வுகள் யாவும் இடம்பெற வாய்ப்புண்டா?

சந்திரிகா என்ற பெண்மணி 17 வருடகாலமாக ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சியால் கவிழ்க்க முடியாதிருந்த ஐ.தே. கட்சி அரசை ஒரேயொரு வருட காலத்தில் கவிழ்த்துக்காட்டிய தலைவியாவார். அன்று அவர் மேல் மாகாண முதலமைச்சர் பதவியை வகித்த வேளையில் பொது மக்களின் பேராதரவுடன் அவ்விதம் ஐ.தே.கட்சி அரசைக் கவிழ்க்க முடிந்தது. அப்படிப்பட்ட சந்திரிகாவுக்கு அரசமைப்பு மூலமான பாதுகாப்பு நிறைந்த நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை வகித்துவரும் இன்றைய நிலையில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தற்போதைய ரணிலின் அரசைக் கவிழ்ப்பதொன்றும் பெரும் சவாலாக அமையப்போவதில்லை. தாம் விரும்பினால் நாளையே அவரால் அரசைக் கலைத்துவிட்டு சகல அமைச்சுக்களையும் தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரமுடியும்.

ஆனால், அவர் அவ்வித நடவடிக்கையை கையாளப்போவதில்லை. நாட்டின் சகல பொதுமக்களாலும் ஏற்கப்படாவிடினும் பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு சந்தர்ப்பம் உருவாகும் வேளையில் நியாயப்படுத்தக்கூடியதொரு விடயத்தைக் காரணம் காட்டி அரசைக் கவிழ்ப்பதற்கான தருணத்தை எதிர்பார்த்து அவர் காத்திருக்கிறார்.

அரசமைப்பு ரீதியில் அது மிகவும இலேசான விடயமான போதிலும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் சிரமம் மிக்கதொரு விடயமாகும். இருந்தபோதிலும், சந்திரிகா இவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பயப்படும் பெண்மணியல்ல. சந்திரிகாவுக்கு சந்திரிகாவின் அரசியல் வாழ்க்கையே சவாலான தொன்றுதான். ஆகவே, அவர் எவ்வித சவால்களையும் எதிர்கொள்ள அஞ்சுபவரல்ல.

நான் சவால்களுக்குப் பயந்து ஓடி ஒளிக்கும் பெணமணியல்ல. சவாலொன்றினை இன்று சந்திரிகா எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. அவரையும் அவரது கணவரையும் அரசியலில் இருந்து வெளியேற்றி அரசியல்

**வியெஸ்ரி**

அநாதைகளாக்கிய ஸ்ரீல.சு.கட்சிக்கு இன்று தலைமை தாங்கி நடத்திச் செல்லவேண்டி ஏற்பட்டுள்ளது. தமது கணவரைக் கொலை செய்த ஜே.வி.பியினருடன் இணக்கப்பாடு பேணவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தம்மைக் கொல்ல முயன்று தனது ஒரு கண்ணின் பார்வையைப் பறித்த விடுதலைப் புலிகள் அமைப்புடன் சமாதான நடவடிக்கைகளில் இணங்கிச்செல்ல வேண்டி ஏற்பட்டுளளது. அதுவுமன்றி தமது அரசைக் கவிழ்த்த ஐ.தே.கட்சி அரசின் அமைச்சரவைத் தலைவர் என்ற வகையில் செயலாற்ற வேண்டி ஏற்பட்டுள்ளது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவிவகித்த வேளையில் ஒருசந்தர்ப்பத்தில் சேர்ஜோன் கொத்தலாவல "அமைச்சரவையில கடமையாற்றும் ஒரே ஒரு ஆண்மகன் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காதான்" எனக் குறிப்பிட்டிருந்தார். இன்று சேர்ஜோன் கொதலாவல உயிருடன் இருந்திருந்தால் சந்திரிகா பண்டாரநாயக்கா குறித்து எவ்வித கருத்துத் தெரிவித்திருப்பார்? ✦

## யாழ்ப்பாண மாநகரசபை
## நல்லூர் உற்சவம் - 2003
## வீதித்தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு கீழ்க்குறிப்பிடப்படும் வீதிகள் 03.08.2003ஆம் திகதி தொடக்கம் 29.08.2003 ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும்.

01. ★ அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்.
★ பிராமணக்கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்.
★ செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் வடபாகம்.

02. ★ பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தையூடாகச் செல்லல்.
★ பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதியால் பேருந்துகளும், சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடைசெய்யப்படும்.

03. வாகனத் தரிப்பிடங்கள்
★ முத்திரைச்சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியில்.
★ கந்தர்மடச் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில்.
★ அம்மன் வீதி, பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியில்.
★ செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/29253) (32-14-16)

## புனித அன்னம்மாள் திருவிழா



வலித்தூண்டல், கீரிமலை புனித அன்னம்மாள் ஆலயத்திருவிழா நாளை (03.08.2003) ஞாயிறன்று நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து அன்னையின் திருவுருவப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

அன்றையதினம் மாலை 4.00 மணிவரை பக்தர்கள் ஆலயத்தில் தங்கிச்செல்ல படையினரின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

(20974) - பங்குத்தந்தை.

## கிணற்றில் வீழ்ந்து மாது உயிரிழப்பு!

வடமராட்சி,ஒக.2

தனியே வாழ்ந்து வந்த வயோதிபப்பெண் ஒருவர் கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்தார்.

கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய வீதியைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை சரஸ்வதி (வயது-75) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து பருத்தித்துறை பதில் நீதிவான் ந. தங்கராசா விசாரணை நடத்தி, நீரில் மூழ்கியதில் மூச்சுத்திணறலால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

(ஒ-173)

## கூட்டுறவாளர் தினவிழா

சண்டிலிப்பாய்,ஒக.2

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் கூட்டுறவாளர் தினவிழாவும், 25வருடசேவையைப் பூர்த்திசெய்த சங்க பணியாளர்களைக் கௌரவிக்கும் வைபவமும் இன்று முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் வி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி கலந்துகொள்வார்.

(ஒ-135)

## உடைந்த மதகினால் நேர்ந்த ஆபத்து

கொழும்புத்துறை,ஒக.2

யாழ்.மவுண்ட்கார்மல் வீதியில் பிரசவ விடுதிக்கு அருகில் உள்ள மதகு நீண்டகாலமாக உடைந்து காணப்படுகிறது.

இவ்வீதிவழியே நேற்றுமுன்தினம் இரவு சைக்கிளில் சென்ற ஒருவர் உடைந்து கிடந்த மதகினுள் வழ்ந்து மயக்கம் அடைந்த நிலையில் யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சேதமடைந்த இந்த மதகினால் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

(ஒ-30)

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான அறிவித்தல்

சுற்றுலா செல்லவிருக்கும் சனி, ஞாயிறு வகுப்பு மாணவர்கள் இன்று (02.08.2003) சனிக்கிழமை பகல் 12.00 மணிக்கு முன் தலைவரைச் சந்திக்கவும்.

(20972) (26-14-16) - யோ. இந்திரபாலன்.

## தவறவிடப்பட்ட தாலிக்கொடி

உரும்பிராயிலிருந்து கல்வியங்காட்டிற்குச் செல்லும் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்யும் போது பெறுமதிமிக்க தங்கப்பவுண் தாலிக்கொடி ஒன்று தவறவிடப்பட்டது. இதனைக் கண்டெடுத்தோர் ஓர் இளம் குடும்பப் பெண்ணின் (திருமணமாகி ஒரு மாத காலமே ஆகின்றது) தாலியின் மகிமையை உணர்ந்து உரியவர்களிடம் ஒப்படைத்துதவவும்.

தகுந்த சன்மானம் உடன் வழங்கப்படும்.

தொடர்பு : நியூ ராஜா சலூன்,
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே.இல : 0777-730-355

(C29254) (32-14-16)

உ
கண்ணகி அம்மன் துணை



## கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில்
## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

*கண்ணகை அம்பாள் அடியார்களே!*

வடகோவையம்பதியில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற மேற்படி ஆலயத்தில் மங்களம் பொங்கும் சுபானு வருடம் ஆடி மாதம் 17ஆம் திகதி இன்று (02.08.2003) சனிக்கிழமை அலங்கார உற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 திருவிழாக்கள் நடைபெற கண்ணகை அம்பாள் அருள்பாலித்துள்ளார்.

### விசேட திருவிழாக்களாக

5ஆம் நாள் மஞ்சத் திருவிழாவும்
9ஆம் நாள் தேர்த் திருவிழாவும் (10.08.2003)
10ஆம் நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

தினமும் காலை 8 மணிக்கு திருவிழா நிகழ்வுகள் ஆரம்மாகி பிற்பகல் 7 மணிக்கு நிறைவுபெறும். வசந்த மண்டபப் பூசை தினமும் காலை 10.30 மணிக்கும் பிற்பகல் 5.00 மணிக்கும் இடம்பெறும்.

*'கண்ணகை அம்பாளை சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்'*

*ஆலய பிரதம குரு:*

சிவாச்சாரிய திலகம் வேத சிவாகம வித்தியா பூஷணம்
**சிவஸ்ரீ ப.சண்முகராஜக் குருக்கள்**

தெய்வீக சொற்பொழிவு நிகழ்வுகள்
தினமும் நண்பகல் 12.00 மணிமுதல் 12.30 வரை நிகழும்.

*சொற்பொழிவு ஆற்றுவோர்:*

★ செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
★ சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
★ சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன்.
★ சிவத்திரு. குமாரசாமி ஐயா.
★ தெய்வத் தமிழ் செம்மல் ச.நவநீதன்.

வலி.கிழக்கு,
கோப்பாய். - ஆலய பரிபாலன சபை.

விளம்பர அனுசரணை:

**ஸ்ரீ முருகன் நகை மாளிகை**
இல.115, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
T.P.No: 222 5965

**விவேகா நகைமாடம்**
இல.131, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
T.P.No: 222 5501

(C/29256) (25-14-16)

## நடுவப்பணியகம் - ஆயப்பகுதி நீதித்துறை

## பணிநிலை வேண்டுகைகள்

### 01. ஆய உதவியாளர்

புளியங்குளத்தில் அமைந்துள்ள ஆயக் கண்காணிப்பு நிலையங்களில் ஆய உதவியாளராகப் பணியாற்றுவதற்கு கீழ்வரும் தகைமையுடையவர்கள் வேண்டப்படுகின்றனர்.

தகைமை :

1. க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### 02. வழிகாட்டுநர்

புளியங்குளத்தில் அமைந்துள்ள ஆயக் கண்காணிப்பு நிலையங்களில் வழிகாட்டுநர்களாகப் பணியாற்றுவதற்கு கீழ்வரும் தகைமையுடையவர்கள் வேண்டப்படுகின்றனர்.

தகைமைகள் :

1. ஆங்கிலம் அல்லது சிங்களம் ஆகிய மொழிகளில் அல்லது இதில் ஏதாவது ஒரு மொழியில் சரளமாக உரையாடக்கூடிய ஆற்றல்.
2. க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல்.

பணி நிபந்தனைகள் :

1. 5 மாதங்களைப் பயிற்சிக் காலமாகக் கொண்ட இந்நியமனம் பயிற்சிக் காலச் செயற்பாடுகளின் அடிப்படையில் நிரந்தரமாக்கப்படும்.
2. வேதனமும் ஏனைய படிகளும் ஆயப்பகுதிச் சுற்றறிக்கைகளுக்கமைய வழங்கப்படும்.

மேற்படி தகைமையுடையவர்களும் ஏற்கனவே ஜூலை மாதம் 9ஆம், 10ஆம், 11ஆம் நாள்களில் வெளியிடப்பட்ட எமது ஆயப்பகுதி பணிநிலை வேண்டுகைகளுக்கமைய சுயவிவரங்களை அனுப்பிவைத்தோரும் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆயப்பகுதி நடுவப்பணியகத்துக்கு 2003.08.08ஆம் நாள் காலை 10 மணிக்கு கல்விச் சான்றிதழ்கள், பிற தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் நேரில் வருகைதரவும்.

மனிதவளப் பிரிவு,
நடுவப்பணியகம்,
ஆயப்பகுதி.

தொ.பே.எண்: 021-2225708

(C/29257) (22-14-16)

பொன்னாலை



## ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

2003 சுபானு வருஷ ஆவணி மாத திவ்விய

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

### விஷேட உற்சவ தினங்கள்

கொடியேற்றம் : ஆடி மாதம் 19ஆம் நாள் (04-08-2003) திங்கட்கிழமை முற்பகல் 11 மணி.

சப்பரத் திருவிழா : ஆடிமாதம் 23ஆம் நாள் (08-08-2003) வெள்ளிக்கிழமை மாலை 7 மணி. பகல் வரலட்சுமி விரதம், நூல் கட்டுதல்

மஞ்சத் திருவிழாவும், புன்னைவாகன உற்சவமும்: 13-08-2003 புதன்கிழமை காலை.

அனந்தசயன திருவிழா : 16-08-2003 சனிக்கிழமை

வேட்டைத் திருவிழா : ஆவணி மாதம் 2ஆம் நாள் (19-08-2003) செவ்வாய்க்கிழமை இரவு 8மணி.

தேர்த்திருவிழா: ஆவணி மாதம் 3ஆம் நாள் (20-08-2003) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை முற்பகல் 11.30 மணிக்கு தேரில் எழுந்தருளல் பகல் 1.00மணிக்கு உறியடி உற்சவம் இரவு 12 மணிக்கு கிருஷ்ணஜெயந்தி.

தீர்த்தத் திருவிழா : ஆவணிமாதம் 4ஆம் நாள் (21-08-2003) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திருவடிநிலைக்கு புறப்படல். முற்பகல் 11மணிக்கு தீர்த்தோற்சவம், மாலை 6மணிக்கு கொடியிறக்கல்.

திருக்கல்யாணம் : 22-08-2003 வெள்ளிக்கிழமை.

★ மஹோற்சவ பிரதமகுரு : சிவாகம கிரியாசிரோமணி, கிரியாபானு, கிரியாகலாபமணி
சிவப்பிரம்மஸ்ரீ க.ச.சோமாஸ்கந்த குருக்கள்.

ஆஞ்சநேயர் அபிஷேகம், பொங்கல், வீதியுலா 14-09-2003 ஞாயிறு நடைபெறும்.

★ தினமும் மாலை 7 மணி - 8 மணிவரை இரா.செல்வவடிவேலின் 'இராமாயணம்' என்ற தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறும்.

(20968) (14.16) - தேவஸ்தான பரிபாலன சபை.

## கண்ணீர் அஞ்சலி



### சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை
**(நியூ சோபிதா நகைமாடம், யாழ்.)**

அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை யாக்குவதோடு, அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தர்மருபன் பல்பொருள் வாணிபம்.
மானிப்பாய்.
(20990) (32-14-16-31)
அமரர் மா.தர்மலிங்கம் குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு 12 . 12 . 1957



கொடியவர் அழிப்பு 02 . 08 . 1999


### அமரர் லயன் மார்க்கண்டு லோகேஸ்வரன்
(இலங்கை மின்சாரசபை ஊழியர், அஜந்தா போட்டோ/ வீடியோ, தொலைத்தொடர்பு உரிமையாளர், ச.மு.க.சமாச யாழ்.நல்லூர் பிராந்தியச் செயலாளர், செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை உறுப்பினர்)

எங்கள் குடும்பத்தின் ஒளி தீபமே!
எம்மில் நிறைந்த ஜோதியே
எம்மை வாழ வைத்த தெய்வமே
எங்கு தான் போக வைத்தார்கள்
ஏங்கித் தவிக்கின்றோம் நாம்
என்றும் உங்கள் நினைவில்
வாழ்கின்றோம்! வாழ்வோம்!

அன்பு மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

*63, சங்கிலியன் வீதி, நல்லூர்.* (20991) (32-14-16-31)

## இதயம் நெகிழ்ந்த அஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி வடிவேல்பிள்ளை

எமது நண்பர் ரமேஷ் (சோபிதா நகைமாடம்) அவர்களின் அன்புத் தந்தையார் **வடிவேல்பிள்ளை** அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் :
தயா நகைப் பூங்கா
உரிமையாளரும், ஊழியர்களும்.

*213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.* (C29267) (32-14-16-31)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் வன்னியசிங்கம் (கிளி)

காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரான்ஸில் வசித்தவருமான வைத்திலிங்கம் வன்னியசிங்கம் (கிளி) அவர்கள் நேற்று (01.08.2003) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேலுப்பிள்ளை மற்றும் நாகம்மாவின் அன்பு மருமகனும் சரஸ்வதிதேவியின் அன்புக் கணவரும் மிதுலனின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சோதி மாளிகை' நீலிப்பந்தனை, காரைநகர்.* (20996) (32-14-16-31)
தகவல்: சகோதரர்கள்.

## கிணற்றிலிருந்து ஷெல்கள் மீட்பு!

தென்மராட்சி,ஓக.2

உசன் பகுதி வீடொன்றின் கிணற்றுக்குள் வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஷெல்களை படையினர் மீட்டனர்.

இவ்வீட்டில் படையினர் நிலை கொண்டிருந்து வெளியேறய பின்னர் வீட்டுக்காரரால் கிணறு துப்புரவு செய்யப்பட்டபோது ஷெல்கள் காணப்பட்டதாகவும் -

அருகில் உள்ள படையினரிடம் இதுபற்றி தெரிவித்ததையடுத்து படையினர் அவற்றை மீட்டு எடுத்துச் சென்றதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மலசல கூடங்கள்

தென்மராட்சி,ஓக.2

[illegible]சேரி ஆஸ்பத்திரி வெளி நோ[illegible]ரிவில் சிகிச்சை பெற வ[illegible] நோயாளர்களின் நலன்கருதி இ[illegible] மலசலகூடங்கள் ஆஸ்பத்திரி [illegible]வில் அமைக்கப்படவுள்ளன.

யுனிசெப் நிறுவனத்தினர் இந்த மலசலகூடங்களை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் -

நேற்றுமுன்தினம் மலசலகூடம் அமைக்கும் இடங்களை யுனிசெவ் பிரதிநிதிகள் பார்வையிட்டுச்சென்றுள்ளதாகவும் -

ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன் தெரிவித்தார். (ஒ-117)

## ஊரகக் கிளை கலந்துரையாடல்

தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் கைதடிப் பிரதேச ஊரகக்கிளை உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் இடம்பெற இருக்கின்றது. (ஒ-75)

## நெடுந்தீவில் மருத்துவ முகாம்

வடமராட்சி,ஓக.2

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் 14ஆவது இலவசக் கண் பரிசோதனையும், இலவசக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் நாளைமறுதினம் திங்கட்கிழமை நெடுந்தீவு திலீபன் மருத்துவமனையில் நடைபெறும்.

இந்நிகழ்வின்போது நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்த வறுமைக் கோட்டிறதுக் கீழ் வாழும் 200 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவசக் கண்ணாடி வழங்கப்படும்.

அத்துடன், சலரோகம், இரத்த அழுத்தப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

(ஒ-173)


லஷ்சுமி சினிமா இணுவில்
எம்.ஜி.ஆர், ராதாசலூஜா, அசோகன், மனோகர் நடித்த
இதயக்கனி
தினசரி: 11.00, 3.00, 7.00
(20985)(31-14-16)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜூன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம் (ரீலஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C29232) (31-14-16)

நிறஞ்சனாஸ் சங்கானை
முரளி, தேவயானி நடித்த
காதலுடன் (ரீலஸ்)
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
BLUE STREAK
தினசரி 8.45 இற்கு.
(C29213) (31-14-16)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (ரீலஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30.
(C/29233) (31-14-16)

லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார், தேவயானி, விவேக் நடித்த
தென்காசிப்பட்டணம் (ரீலஸ்)

தினசரி: 3.00, 7.00 மணி (புதிய நேரம்)
தினசரி காலை 11.00 மணிக்கு CROUCHING TIGER HIDDEN DRAGON
(C/29231) (31-14-16) சிறந்த கராட்டிச்சித்திரம.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயராணி வரதராஜா
(ஆசிரியை, யா/ கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராணி வரதராஜா நேற்று (01.08.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் இரத்தினம் வரதராஜாவின் அன்பு மனைவியும் கந்தையா - இராசமலர் தம்பதிகளின் அன்பு மகளும் தெல்லிப்பழை பூதர்-இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும் புஸ்பராணி, கருணதாசன் (பிரான்ஸ்), கருணாதேவி, விஜயதாசன் (பிரான்ஸ்), விஜயதேவி (சுவிஸ்), ஜெயதாசன், காலஞ்சென்ற பிறேமதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலசேகரம், ராதிகா (பிரான்ஸ்), திலகதாசன், சிவலிங்கம் (சுவிஸ்), பிறேமராஜா (டென்மார்க்), மகிழராஜா, விஜித்தராணி, சசிகலா (கூட்டுறவு பரிசோதகர்), கங்காதேவி, கஜன் (பிரான்ஸ்), கமலன் (யாழ். பல்கலைக்கழக 3ஆம் வருடம், கலைப்பிரிவு) ஆகியோரின் மைத்துனியும் லதா (டென்மார்க்), யோகனின் (பஹறேய்ன்) சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2003) ஞாயிறு முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னாலை வீதி, துர்க்கா மில் அருகில், மானிப்பாய்.* (20995) (14-16-31)
தகவல்: இ.மகேந்திரம்.

### குட்டியர் இராசதுரை

சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட குட்டியர் இராசதுரை அவர்கள் நேற்று (01-08-2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற தாதியர்) அன்புக் கணவரும் துஷ்யந்தன் (டென்மார்க்), பிரதீபன், பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கீதாஞ்சலி (டென்மார்க்), கலாவதி, பாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கேதுஜன், சுபாஜன், அலக்ஷியா (டென்மார்க்), அருண்(டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி ஒழுங்கை, சண்டிலிப்பாய்.* (20994) (32-14-16-31)
தகவல்: சரஸ்வதிப்பிள்ளை (மனைவி), பிள்ளைகள்.

### திருமதி மாசிலாமணி அமிர்தகாந்தி

இல.14, கேசாவில் வீதி, வண்ணார்பண்ணை வடக்கைச் சேர்ந்த திருமதி மாசிலாமணி அமிர்தகாந்தி நேற்று (01.08.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மாசிலாமணியின் அன்பு மனைவியும் சிவனேஸ்வரன் (ஹொலண்ட்), வி.சுகந்தினி, மா.தர்மினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கா.விக்கினேஸ்வரனின் மாமியாரும் விஷானியின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.08.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேசாவில் பிள்ளையார் கோயிலடி, வண்ணார்பண்ணை.* (20993) (32-14-16-31)
தகவல்: கா.விக்கினேஸ்வரன் (மருமகன்)

### நடராசா புஸ்பரஞ்சனிதேவி (தேவி)

யாழ்ப்பாணம், உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு-13ஐ வதிவிடமாகவும் கொண்ட நடராசா புஸ்பரஞ்சனிதேவி (தேவி) 30.07.2003 புதனகிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்சாலையிலிருந்து இன்று (02.08.2003) சனிக்கிழமை மாலை 4.30மணிக்கு பொரளை கனத்தை மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*64-1/3, ரட்ணம் றோட், கொழும்பு - 13.* (20988) (29-14-16-31)
தகவல்: நிலோஷன் (மகன்). T.P-074-618379.

### சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை
(நியூ சோபிதா நகைமாடம)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தம்பகாமம், பளையை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இல. 328, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவரும் நியூ சோபிதா நகைமாட உரிமையாளர்களில் ஒருவருமாகிய சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (01.08.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி அன்னக்கண்டுவின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (சமூக சேவை உத்தியோகத்தர் - உடுவில்), சதீஷ்குமார் (பிரான்ஸ்), ரமேஸ்குமார் (நியூ சோபிதா நகைமாடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்சினி, சுகந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிருஷிகாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2003) சனிக்கிழமை மாலை 4மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 328, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* (C/29270)(14-16-31)
தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### சின்னத்துரை குமாரசாமி
(இளைப்பாறிய முகாரி (போமன்), காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுத் தாபனம்)

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், கோவில் வீதி, யாழ்ப்பாணத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை குமாரசாமி அவர்கள் நேற்றுமுன்தினம் (31.07.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சின்னத்தங்கம் ஆகியோரின் மகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை-விஜயரட்ணம் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற கனகமணியின் அன்புக் கணவரும் அரவிந்தன் (நோர்வே), துஸ்யந்தன் (நோர்வே), அருள்செல்வன் (கனடா), பிரியகுமாரன் (திருகோணமலை), பிரியதர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் குணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் புஸ்பராணி (நோர்வே), ஸ்ரீ உமையாள் (நோர்வே), ராகினி (கனடா), ஜீவராணி (திருகோணமலை) ஆகியோரின் மாமனாரும் அனிக்சன், கவித்திரா, அர்ஜுன், புருசோத், ரஜிவன், தனுமாறன், டிறோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.08.2003 திங்கட்கிழமை காலை 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மே.பா.அதிதீரன் மின்சார, தொழில்நுட்ப நிறுவனம். இல. 135, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.* (20992) (31-14-16)
தகவல்: பிரியதர்சன் (மகன்).

# வரைவுக்கு திருத்தம் சமர்ப்பிக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே பாலகுமாரன் இவற்றைத் தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக தலைவர் எமக்கு விளக்கம் அளித்திருக்கிறார். முழு உணர்வுத் திறனுடன் இன்றைய சர்வதேச அரசியலை முன்கூட்டியே அறிந்து அதன் படி செயற்படுகிறோம் 'என்று அவர் எங்களுக்கு கூறியிருக்கிறார்.

நாம் எமது மக்களின் விடுதலைக்காக தீவிர போராட்டம் நடத்திக்கொண்டிருந்த போது, சர்வதேச அங்கீகாரம் புலிகளுக்கு இல்லை, சர்வதேசம் இதில் தலையிடவில்லை என்றெல்லாம் கூறிவந்தார்கள். நாம் தொடர்ந்து போராடி சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டபோது இந்தியாவும் அமெரிக்காவும் வந்து தலையிடும். அத்துடன், புலிகளின் ஆட்டம் முடிந்து போகும் என்று கூறினார்கள். இன்று நிலைமைவேறு.

இலங்கையின் பொருளாதாரம் சீர் குலைந்து அடிமட்டத்துக்குப் போய் நாடு அழியும் நிலை காணப்படுகிறது. அடுத்த பத்து ஆண்டுகளில் பொருளாதாரம் மோசமான வீழ்ச்சி காணப்போகிறது. கடன் கொடுத்தவா கள் எல்லோரும் வந்து கதவில் தட்டுகிறார்கள்.

கட்டுப்படுத்த முடியாதவாறு கடனும் வட்டியும் எல்லைமீறிச் சென்றுள்ள நிலைமை காணப்படுகிறது. கடன் வழங்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றனவற்றின் பிரதிநிகள் கிளிநொச்சிக்கு வந்து புழுதி வாங்கிக்கொண்டு அலைந்து திரிகிறார்கள். இந்தச் செய்தியை மக்கள் உணரவேண்டும்.

எங்களது பேராட்டம் காரணமாகவே அரசு இந்த நிலைக்கு வந்து விட்டது. 40 ஆயிரம் கோடி ரூபா தருவதாகக் கூறியவர்கள் இன்னும் ஒன்றையும் தரவில்லை. இதனை நீங்கள் புரிந்துகொண்டால் நாங்கள் போட்டிருக்கின்ற முடிச்சு எவ்வளவு இறுக்கப்பட்டுள்ளது என்பதை உணர்வீர்கள்.

சர்வதேச ரீதியில் தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுத்தே செயற்படுகின்றோம். எமது இந்த நிலைப்பாட்டையிட்டு எவரும் அஞ்சத்தேவையில்லை. அநாவசியமான சீண்டுதல்களோ, தேவையற்ற குழப்பலோ, சிக்கலோ வராது. இது விடயத்தில் எமது தலைவர் தெளிவான பார்வையோடு இருக்கிறார். அதற்கமையவே தற்போது காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை மக்கள் உணர வேண்டும்.

### இந்தியா இணங்கி வரவேண்டும்

இந்தியா எமது தூரத்து உறவு நாடு. நாங்கள் இந்தியாவிடம் எந்த மோதலையும் ஏற்படுத்த என்றுமே விரும்பியதில்லை. இந்தியத் தரப்புக்கு என்றும் நாம் நன்றியுடையவர்களாவோம்.

நடந்தவை எல்லாம் நடந்தவையாக இருக்கட்டும். நாங்கள் என்றைக்கும் இந்தியாவின் போக்குக்கு எதிராகச் செயற்படப் போவதில்லை. இந்தியாவுடன் நட்புறவோடு இணங்கிச் செயற்பட மனப்பூர்வமாக விரும்புகிறோம். இதில் எந்தவித அநாவசியமான குழப்பங்களும் கிடையாது. இதைத்தான் இந்தியாவுக்குச் சொல்ல விரும்புகிறோம். எங்களைத் தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்துபவர்கள் பயன்படுத்திக்கொள்ளட்டும். அந்த வகையிலாவது அவர்களுக்கு நன்மை செய்தவர்களாக இருப்போம். எமக்கு எதிரான பல செய்திகளை இந்தியா கசிய விட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவுடன் எந்தச் சிக்கலுக்கும் போகாமல் நல்லுறவைப் பேணவே விரும்புகிறோம். எனவே, இந்தியா எங்களைப் பகைக்க வேண்டிய அவசியம் கிடையாது. இதை இந்தியா உணர்ந்து கொள்ளும் என்பது எமக்குத் தெரியும்.

எம்மோடு இந்தியா நேர்மையாக உறவு வைக்க முன்வந்தால் நாங்களும் இணக்கமாகச் செயற்படத் தயாராக இருக்கிறோம்.

எம்மோடு மோதுவதற்கு இந்தியாவுக்கு எந்தக் காரணமும் கிடையாது. அவர்களாகவே உருவாக்கிக் கொண்டால் அன்றி இதை புதுடில்லிக்கு தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அவர்களின் பிராந்திய அரசியலில் எந்தக் குழப்பத்தையும் கொண்டுவர நாங்கள் தயாராக இல்லை. எனவே, இந்தியா புலிகளை இராஜதந்திர ரீதியாக அணுகவேண்டும்.

நாங்கள் மரணப் புதைகுழிகளைத் தோண்டுவதற்காக இங்கு வரவில்லை. அரசியல் ரீதியில் சிங்களத்துக்கு புதைகுழி தோண்ட ஆரம்பித்திருக்கிறோம்; நிமிர்ந்து நிற்கிறோம். கழுத்தை வெட்டவில்லை; ஆள்களை வெட்டிக் கொல்லவில்லை. இனிய பழிவாங்கலையே செய்கிறோம் அரசியல் ரீதியாக சிங்கள் ஆட்சியாளர்களைப் பழிவாங்குகிறோம்.

அரசியல் தீர்வு பற்றி பேச நாங்கள் தயாராகவே இருக்கிறோம். ஆனால், அரசு அது பற்றிப் பேச தயாராக இல்லை. தீர்வைத் தா என்று நாம் கேட்கிறோம். அரசினால் அது ஒருபோதும் முடியாது.

பேச்சுக்களை இடைநிறுத்துமாறும் டோக்கியோவுக்கு போக வேண்டாம் என்றும் தலைவர் கூறினார். உலகம் அதிர்ந்தது. பேச்சைத் தொடருங்கள் என்று சர்வதேச சமூகம் எம்மைக் கேட்டது. நாங்கள் இறங்கிப் போனோம்.

பல முயற்சிகளின்பின் இரண்டு பக்க வரைவு ஒன்றை அரசு தந்துள்ளது. இந்த வரைவில் எழுத்துப் பிழைகளைப் பிடிப்பதற்காவது நாங்கள் பேச்சுக்கு வரமாட்டோமா என்று அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இது தான் உண்மை.

இடைக்கால நிர்வாக வரைவு விடயத்தில் சகலரையும் இணைக்கும் படி எமது தலைவர் கூறியிருக்கிறார். இதில் மாற்று இயக்கங்கள் நிலை என்னவென்று சிலர் கேட்பார்கள். இந்தக் குழப்பங்களுக்கு எல்லாம் விரைவில் தீர்வுவரும் என்று அடித்துச் சொல்லத் தயாராக இருக்கின்றேன்.

"எல்லா அறிஞர்களையும் இணைத்துக் கூடுங்கள்; ஒரு சட்ட ரீதியான - அரசியல் ரீதியான -பதிலைத் தயாரியுங்கள்"என்று தலைவர் கூறியுள்ளார்.

தலைவர் சொன்னதற்கு ஏற்ப, முன்னர் அரசமைப்பு வரைய 'ஓஸி' யில் ஆலோசனை வழங்கியவர்களுடன்கூட நாம் தொடர்பு கொண்டுள்ளோம்-சட்ட வல்லுநர்களாக உள்ள சகல அறிஞர்களையும் நமது அரசியல்துறைப் பொறுப்பாளர் அழைத்து ஒருநாட்டில் சந்தித்து, எமது பிரச்சினையை அவர்களுக்கு விளக்கமாகக் கூறவிருக்கின்றார். தமிழர் பிரச்சினைக்குச் சரியான பதிலை எழுதும்படி அவர்களிடம் அரசியல்துறைப்பொறுப்பாளர் அப்போது கேட்டுக்கொள்வார். அந்தப் பதில் தமிழ் மக்களின் தலைவிதியை மாற்றக் கூடியதாக அமையவேண்டும்.

- இவ்வாறு பாலகுமாரன் தெரிவித்தார். (ஐ-3)

# புலிகளின்......

(முதலாம் பக்கத்தொடர்ச்சி 9.30 மணியளவில் மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்குப் புறப்பட இருந்தார். ஆனால்,அவரது பயணம் ஆறு மணித்தியாலங்களால் பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை அவர் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களான வடமுனை, குடும்பிமலை போன்ற இடங்களைப் பார்வையிட்டு தரவையில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தையும் தரிசித்தார்.

பின்னர் கரடியனாற்றிலுள்ள விடுதலைப் புலிகளின் தேனக அலுவலகத்தில் தளபதிகள், பொறுப்பாளர்களுடன் சந்திப்பொன்றை நடத்தினார்.

அதைத்தொடர்ந்து 3.40 மணியளவில் விசேட ஹெலியில் அவர் திருகோணமலைக்குப் புறப்பட்டார்.

புலிகளின் திருகோணமலை கட்டளைத்தளபதி பதுமன் உட்பட புலிகளின் மூத்த பிரமுகர்கள், பொதுமகள் சபூர் மகாவித்தியாலய மைதானத்தில் தமிழ்ச்செல்வனை வரவேற்கக் காத்திருந்தனர்.

ஆனால், யாரும் எதிர்பாராத விதமாக தமிழ்ச்செல்வனை ஏற்றிவந்த ஹெலிகொப்டர் சம்பூரில் உள்ள புலிகளின் போர்பயிற்சி மைதானத்தில் தரையிறங்கியது. அங்கு புலிகளின் திருகோணமலை மாவட்ட போர்ப் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் கில்மன் அவரை வரவேற்றார்.

திருமலையில் புனர்வாழ்வு, மீள குடியேற்றம் மற்றும் போராளிகளின் பிரச்சினைகள் ஆகியவை குறித்து கவனம் செலுத்துவதே தமது விஜயத்தின் நோக்கம் என்று செய்தியாளரிடம் தெரிவித்த தமிழ்ச்செல்வன், பொதுமக்களையும், சிவில் அதிகாரிகளையும் சந்தித்து அவர்களின் பிரசசினைகள் குறித்து நேரடியாகத் தாம் விரிவாகக் கலந்துரையாடவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

குரங்குபாஞ்சான் பகுதியில் சம்பந்தப்பட்ட எமது முகாம் நீண்டகாலமாக இருக்கின்றது. அதை அகற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. போர்க்காலத்தில் புலிகளைத் தவிர எந்தப்படையும் அந்தப்பக்கமே வரவில்லை. அப்படியிருக்க அது தமது பிரதேசத்தில் இருப்பதாக அரசு தரப்புக் கூறுவது வியப்புக்குரியது. புலிகளின் அந்தமுகாம் தொடர்ந்து அங்கேயே இருக்கும். அதை நான் சென்று பார்வையிடவேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை. ஆகவே, நான் அங்கு போகமாட்டேன்.

"அரச தரப்பும், சமாதானச் சூழ்நிலை நீடிப்பதை குழப்ப விரும்பும் சக்திகளுமே இந்த விவகாரத்தை பூதாகரமாக்க முயற்சிக்கின்றன. அதில் அர்த்தம் ஏதும் இல்லை."

என்று தமிழ்ச்செல்வன் கூறினார்.

திருமலையில் நேற்று புலி உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் தமிழ்செலவன் உரையாற்றினார். அவர் நாளை திருமலை மாவட்டத்தில் தங்கியிருப்பார் எனத்தெரிவிக்கப்பட்டது.(ஐ-8)

# இளம்தாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தையான பிரவன்-கம்சிகா, சுலோஷனாவின் சகோதரர்களான நற்குணசிங்கம் விபுசனா (வயது9), நற்குணசிங்கம விபுசன் (வயது7), நற்குணசிங்கம் விஷ்ணு ஆகிய ஐவரையும் கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமற் போனோருக்கு என்ன நடந்து என்பது மர்மமாக உள்ளது.

இவர்கள் தொடர்பான தகவலறிந்தோர் யாழ்.சோமசுந்தரம் அவனியூவில் அமைந்துள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துடன் அல்லது 021-222 2021, 021-222 5470 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.சந்திரசேகர அறிவித்துள்ளார். (ஐ-8-5)

# உயர்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கூறினார்.

இம்முறை பரீட்சையில் சுமார் இரண்டரை லட்சம் மாணவர்கள் தோற்றியுள்ளனர்.

மேலும் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இணையத்தளம் ஊடாகவும், வழமை பிரகாரம் வெளியிடப் படவிருப்பதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

## திருமலையில் கடை மீது குண்டு வீச்சு; முன்புறம் சேதம்

திருகோணமலை,ஒக.2

திருகோணமலை நகரம் என்.சி. வீதியில் உள்ள புடைவைக் கடை ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 9.15 மணியளவில் குண்டொன்று வீசப்பட்டது.

அக்குண்டு வெடித்ததில் கடையின் பெயர்ப்பலகையும் முன்புறமும் சேதமடைந்துள்ளன. எனினும், பொது மக்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்தச் சம்பவத்தை அடுத்து நகரிலுள்ள பல கடைகள் மூடப்பட்டிருந்தன. குறிப்பாக ஓர் இனத்தைச் சார்ந்தவர்களின் கடைகளே நேற்றுத் திறக்கப்படவில்லை.

குண்டு வீச்சுக்கு இலக்கான கடையில் வாடிக்கையாளர்கள் புதிய உடைகளை அணிந்து பார்ப்பதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருந்த உடை மாற்றும் அறையில் இரகசியமாகக் 'கமெரா' ஒன்று பொருத்தப்பட்டிருந்தது என்று முன்னர் திருகோணமலை நகரில் பரவலாகக் கதை அடிபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


## இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
**S.N.குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(28-14-16) (20854)

## அருள் கொமினிக்கேசன்

எமது அன்புக்குரிய வாடிக்கையாளர்களே!
நல்லைக்கந்தன் உற்சவத்தை முன்னிட்டு ஓகஸ்ட் 2ஆம், 3ஆம் திகதிகளில் - சனி,ஞாயிறு விசேட கட்டணத்தில் வெளிநாட்டு அழைப்புக்கள்!
நிமிடத்துக்கு 5/= ரூபா மட்டுமே!
04.08.2003 முதலாக ஒரு நிமிட அழைப்புக்கான கட்டணம் 8 ரூபா மட்டுமே.
☎ 3536
இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம்.
(20852)

★ புதியதோர் உதயம் ★
**BRIGHTMAN**
நாவலர்வீதி (கிளை), யாழ்நகர்.
கலைப் பிரிவு PAPER CLASS
தமிழ் - N.பாலா
அளவையியல்-P.கமல்
இ.நாகரீகம் - சுரேஸ்
நாடகம் - மதி
ஆரம்பம்: 03-08-2003
Sun.4.00 p.m.
(20888) (12-)

## தவறிவிட்டது

HALOTRUST இல் பணிபுரியும் வெளிநாட்டுப் பிரஜை ஒருவரின் சில்வர் கலர் செல்போன் (SAMSUNG) கடந்த சனிக்கிழமை (26.07.2003) யாழ். நகர மையப் பகுதியில் கைதவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் ரூபா 5000 வழங்கப்படும்.
THE HALO TRUST
655, நாவலர் வீதி,
நல்லூர்.
T.P. 021 222 3779
0777-149305
குறிப்பு:-★இக் கையடக்கத் தொலைபேசியினை இப்பிரதேசத்தில் உபயோகிக்க முடியாது.
★இதனுள் இருக்கும் சிம் காட் மிக அவசியமானதாகும்.
(20971)

## கராத்தே கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்துப்பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத கராத்தே கழக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை (03-08-2003) ஞாயிறு காலை 10.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடாகியுள்ளது. அதில் முக்கிய முடிவுகள் எய்தப்பட இருப்பதால் சகல கராத்தே ஆசிரியர்கள், மாணவர்கள் தவறாது சமுகந்தரும்படி வேண்டப்படுகின்றீர்கள்.
விளையாட்டுத்துறை,
யாழ்.மாவட்டம்.
(c/29271)

## முக்கிய அறிவித்தல்

Serendib Express
Serendib Express Airlines
எமது நிறுவனத்தின் சகல விமான பயணச்சேவைகளும் 2 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை தவிர்க்க முடியாத காரணத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.
எம் சேவையில் விமானப்பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொண்டவர்கள் பிரயாண மாற்று ஒழுங்குகளை செய்வதன் பொருட்டு எமது யாழ்ப்பாண காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு - 021 - 2223916
0777 - 714871
செரண்டிப் விமான சேவை
யாழ்ப்பாணக் காரியாலயம்,
இல.13, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(c/29226)

## மரண அறிவித்தல்

### திருமதி துரைக்குட்டி செல்வமணி

(இளைப்பாறிய மருத்துவமாது, யாழ்.போதனா வைத்தியசாலை)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைக்குட்டி செல்வமணி அவர்கள் நேற்று (01.08.2003) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைக்குட்டியின் அன்பு மனைவியும் அன்னலிங்கம், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் நாகலட்சுமி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவனேந்திரன் (கனடா), பூபாலசந்திரன் (ஜேர்மனி), புலேந்திரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் இசைபெலா (கனடா), மீனலோஜினி (ஜேர்மனி), சர்வேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'செல்வபவனம்',
நியூறோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(20997) (29)
தகவல்:
து.புவனேந்திரன் (மகன்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.